உ
சிவமயம்

News
aperin Ceylon
P. M. G. NO. H. A
89/300 of 1939.

# இந்துசாதனம்

விரோதி வருஷ
(1889)
ஆவணிமாதம்
28-ந்உ ஆரம்பமானது

செவ்வாய் வெள்ளிதோறும் வெளிவருவது

மாசில் வீணையும் மாலை மதியமும், வீசுதென்றலும் வீங்கிளவேனிலும், மூசுவண்டறை பொய்கையும் போன்றதே, ஈசனெந்தை யிணையடி நீழலே.

புத். ருகூ] யாழ்ப்பாணம் — சர்வசித்து ஙூ புரட்டாதி மீ உச உ (1947 ஒக்டோபர் 10 வெள்ளிக்கிழமை) [இல ருஉ

## அற்புதக் காதல்

[அழகு மதியன்]

பூங்கோயிலிலே பங்குனித் திங்களிலே பெருந் திருவிழா நடக்கிறது. பல்லாயிரக் கணக்கான மக்கள் எம்பெருமானைக்கண்டு தொழுது அவன் அருளைப் பெறச் செல்லுகிறார்கள். ஊர் எங்கும் மங்கலகரமாக அழகிய தோரணங்களாலும் கொடிகளாலும் விதானங்களாலும் அலங்கரிக்கப் பெற்றிருக்கிறது தெருக்கள்தோறும் நல்லிசை இயங்கள் முழங்குகின்றன. இன்னிசையாளர்கள் அழகாகப் பாடிக்கொண்டு செல்லுகிறார்கள். அறவோர்களும் துறவிகளும் துதிகளை இயம்பிகொண்டு செல்லுகிறார்கள். மக்கள் முகங்கள் எல்லாம் ஒரு சிறிதேனும் கவலையோ துயரமோ இன்றி மகிழ்ச்சியே நிரம்பி விளங்குகின்றது குழந்தை முதற்கொண்டு கிழவிவரைக்கும் எல்லா மக்களும் தூய நெஞ்சினிலே இறைவனைத் துதித்துக்கொண்டு அவனுடைய ஆனந்த தரிசனத்தை எதிர்பார்த்துக் கொண்டு நிற்கிறார்கள். அந்தப் புனித ஊர்முழுதும் திருக்கயிலையோ என்று கூறும வண்ணம பொலிந்து நிற்கிறது.

நாட்டுப்புறத்திலே தொலைவிலே ஒரு சிற்றூர். அவ்வூரிலே ஒரு ஏழைக் குடும்பம். பண்டைநாள் முதற்கொண்டு வாழையடி வாழையாக வந்த பரம்பரைச் சைவசமயத்தை அனுசரித்து வந்தது அக்குடும்பம ஒரு சிறிய நிலத்தில் தாங்களே கைப்பட உழுது வாழ்க்கை நடத்தி நிம்மதியாக இருந்தது அக்குடும்பம். அக்குடும்பத்தில் இப்போது தந்தையும் தாயும் இரண்டு மூன்று குழந்தைகளும் இருக்கிறார்கள். மூத்தபெண்ணே அறிவு தெளிந்து வயது வரும் தருணத்தில் இருக்கிறாள். பங்குனி மாதம் திருவிழாவிற்கு ஊரில் பல குடும்பங்கள் யாத்திரை செல்வதை அறிந்தார்கள். இக் குடும்பத்திலும் எம்பெருமானை கண்டு தொழவேண்டும் என்ற ஆர்வம் பிறந்தது. குழந்தைகளும் மனைவியும் தங்கள் எண்ணத்தைத் தெரிவித்தார்கள். தலைவனும் ஒத்துக்கொண்டான். அந்த ஆண்டு மழை பெய்து விளைவு நன்றாக இருந்தது. வேளாண்மை முழுதும் வீட்டிற்கு வந்தது. பங்குனித் திங்களில் வேறு வேலை கிடையாது பூங்கோயிலைத் தரிசித்து எம்பெருமானுடைய திருவிழா கண்டு களிக்க வேண்டும் என்பதே அவர்களுடைய மட்டுக்கடங்காத ஆர்வம் ஆகவே அக்குடும்பத்தார் எல்லாரும் புறப்பட்டார்கள். யாத்திரைக்கு வேண்டிய பொருள்களை எடுத்துக் கொண்டு வழி நடந்தார்கள். வழி முழுதும் கடவுளைச் சிந்தித்துக் கொண்டே அழகிய திருப்பாசுரங்களைப் பாடிக் கொண்டு செல்கிறார்கள். திருவிழாவிற்குப் போய்ச் சேருகிறார்கள். அன்றே எம்பெருமானுடைய திருவுலா நடைபெறப்போகிறது.

தெருவிலே ஆரவாரம் மிகுதியாயிற்று. யானைகளும் தோரணங்களும் கொடிகளும் சென்றன. எருதின் பேரில் அமர்ந்து ஒருவன் இரட்டை முழவை அடித்துக்கொண்டு சென்றான். இனிய வாத்தியங்கள் முழங்கின. வீடுகளில் இருந்தவர்கள் எல்லாரும் தெருத் திண்ணைகளுக்கு வந்தார்கள். ஊரிலிருந்துவந்த அந்த சைவக் குடும்பத்தாரும் தாங்கள் தங்கியிருந்த விடுதியைவிட்டு வெளியே வந்தார்கள். நெடுந்தூரத்தில் இறைவன் இறைவியுடன் இடபாரூடனாகித் திருவுலா வந்துகொண்டிருந்தான். அருகில் வரவர அவனுடைய திருமேனியின்ஒளியும் இனிய முகத்தின் புன்சிரிப்பும் விலையுயர்ந்த ஆடையணிகளால் ஆக்கப்பட்ட அழகும் காண்போர் கண்களைக் கவர்ந்தன. மக்கள் எல்லாரும் பேரின்பத்தில்முழுகி ஆ ஆ என்று பேரொலி செய்தார்கள். தாங்கள் கொண்டு வந்த தேங்காய் பழம் சூடம் முதலியவை தந்து பூசை செய்யக் கொடுத்துப் பிரசாதம் பெற்றுத் திருநீறு அணிந்து சென்றார்கள்.

நமது குடும்பத்தாரும் இறைவன் அருகில் சென்று வழிபட்டார்கள். அறிவு தெளிந்த பெரிய மகளோ இளவயது முதல் சமய ஈடுபாட்டில் திகழ்ந்தவள். இன்று இறைவனுடைய பொலிவினைக் கண்டவுடன் அதிலேயே மெய்மறந்து நின்றாள். பேச்சு நின்றது. உணர்வு இழந்து சாய்ந்தாள். பெற்றோர் கவலை உற்றார்கள். தீர்த்தம் தெளித்து திருநீறு இட்டு மெதுவாக விடுதிக்குள் அழைத்துச் சென்றார்கள். பாயில படுத்தவள் எழுந்திருக்கவும் ஆற்றல்குன்றி இருந்தாள். திருவிழா முடிந்ததும் வெகு கவலையோடு பெற்றோர்கள் அவளை எடுத்துக்கொண்டு ஊருக்குத் திரும்பினார்கள்.

ஊர் சேர்ந்தும் பிரமை பிடித்தவள் போலவே இருந்தாள் அடிக்கடி அவனுடைய பெயரென்ன என்பாள். யாருடைய பெயர் என்றால் "அந்த அழகன், என்னைக் கவர்ந்தவன் என் இறைவன்" என்பாள். அவன் பெயர் தான் ஆரூரன், எம்பெருமான், தேவர்பிரான், தியாகராயன் என்று சொன்னால் அத்திரு நாமங்களையே சொல்லிக்கொண்டு மூர்ச்சைபோவாள். பிறகு திடீரென்று எழுந்திருப்பாள். அவன்வண்ணம் என்ன என்று கேட்பாள். "பொன் வண்ணம் எவ்வண்ணம் அவ்வண்ணம் அவன் திருமேனி" என்றால் அதையே உச்சரித்துக்கொண்டு நிலத்தில் சாய்வாள். பின்னையும் எழுந்திருந்து அவனுடைய ஊர் எது என்று கேட்பாள். உனக்குத்தெரியுமே அதுதான் ஆரூர் என்றால், ஆர் ஊரா, அதற்கு ஒருவரும் உரிமையோர்இல்லையா? அவனே தான ஆரூரன் என்ற உரிமையாளன் என்று பித்தம் பிடித்தவள்போல் சிரிப்பாள், இதனைப் பார்த்த பெற்றோர் இவளுக்கு சித்தப்பிரமை பிடித்ததுபோலும் என்று மணிமந்திரங்களால் சிகித்சை செய்யத் தொடங்கினார்கள். ஆனால் பயனில்லை.

தொடர்ச்சி 5-ம் பக்கம்

### பிரார்த்தனை

குனித்த புருவமும் கோவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும்
பனித்த சடையும் பவளம்போல் மேனியிற் பால்வெண் ணீறும்
இனித்த முடைய எடுத்தபொற் பாதமும் காணப் பெற்றால்
மனித்தப் பிறவியும் வேண்டுவ தேயிந்த மாநிலத்தே.

### ஒன்றுசேருக

## முஸ்லிம்மந்திரி வேண்டுகோள்

பீகார் மாகாணத்தில் மந்திரியாயுள்ள ஜனுப் அப்துல்லா அன்ஸாரி, இனியாவது முஸ்லிம் லீக்கர் தம் பிழையை யுணர்ந்து பாகிஸ்தான் என்ற தனிராஜயம் வைத்திருப்பதை விடுத்து, இந்தியாவுடன் ஒன்றுசேர முயற்சி செய்யவேண்டும் என்று ஓர் அறிக்கை விட்டிருக்கிறார். இதேமாதிரி அறிக்கைகள் இப்போதுசிலகாலமாக லீக்கர்களாலும் விடப்படுவது குறிப்பிடத்தக்கதாம்.

பாகிஸ்தான் அமைக்கப்பட்டபின், இந்தியாவில் உள்ள முஸ்லீம்கள் 4½ கோடியினரின் நிலை மிகவும நெருக்கடியாய்விட்டதென்றும், அதனையிட்டுப் பாகிஸ்தான் கவலை எடுக்கவில்லை என்றும் பெரிய முறையீடு இந்திய முஸ்லிம்களினால் ஓப்போது செய்யப்பட்டு வருகிறது. பட்டறி கெட்டறி. பத்தென்று இறுத்தறி என்றாங்குஜின்னாவுக்கு ஆதரவு கொடுத்த இந்திய முஸ்லிம லீக்கர் இன்று அவதிப்படுவது நூதனமல்ல என்று தேசீய முஸ்லிம்கள் கூறுகின்றனர்.

### சிங்கக்கொடி!

## 50,000 வந்துவிட்டன

இலங்கையின் தேசீயக்கொடி எதுவாயிருக்கவேண்டுமென்பதை எல்லா மக்களின் பிரதிநிதிகளும் சேர்ந்து நிர்ணயிக்குமுன் இலங்கையரசாங்கம் சிங்கக் கொடிதான் இந்நாட்டின் தேசீயக் கொடி எனக் கருதி, அதில் 50,000 கொடிகளை இங்கிலாந்திலிருந்து இப்போது இறக்குமதி செய்திருக்கிறது,

இந்தக் கொடிகள் அரசாங்க நிலையங்களிலும், ஏனைய கட்டிடங்கள் மீதும் ஆரோகணிக்கப்படுமாம்.

சிம்மக் கொடிதான் இலங்கையின் தேசீயக் கொடி என்பதை இங்குள்ள சகல சமூகத்தினர் அனைவரும் ஒப்புக்கொண்டுள்ளனர் என்று கொழும்பு டெயிலிநியூஸ் பத்திரிகை கூறுகிறது.

## எது சிறந்தது?

### இல்லறமா? துறவறமா?

(பாரதியார்)

ஒரு ரிஷியும் ஒரு மன்னனும் பல விஷயங்களைப்பற்றிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.

"இல்லறம் பெரிதா, துறவறம் பெரிதா?" என்பது மன்னரின் கேள்வி.

ரிஷி சொல்லுகிறார்: "அரசனே, நீ என்னோடு பாதசாரியாக வருவாயானால் தெரியப்படுத்துகிறேன்."

அப்படிக்கு பாதசாரியாகப் போகும்போது கன்னட தேச ராஜகுமாரத்திகு விவாகம் நிச்சயித்திருப்பதால், ஐம்பத்தாறு தேச ராஜாக்களும் ராஜகுமாரத்தியின் விவாகத்திற்கு வந்திருக்கிறபோது, அவ்விடத்திற்கு மேற்படி அரசனும் ரிஷியும் இருவருமாகப் போய்ச் சேர்ந்தார்கள் இப்படி எல்லோரும் சுயம்வர மண்டபத்திலே கூடியிருக்க, அந்த சுயம்வர விவாக மண்டபத்திலேஒரு பால்ய சன்யாசியும் வேடிக்கை பார்க்க வந்தார்,

ராஜகுமாரி, எந்த ராஜகுமாரனை விவாகம் செய்து கொள்ளுகிறாய்? என்று தோழியானவள் கேட்டுக்கொண்டே போனாள்.

அவ்விடத்து ராஜகுமாரர்களை எல்லாம் 'வேண்டாம், வேண்டாம்' என்று விலக்கிப்போய், இந்த பால்ய சந்நியாசியைக் கண்டு புஷ்ப மாலையை அணிந்தாள். அந்தப் புஷ்ப மாலையானது பாம்பாகி மேற்படி பால்ய சந்யாசியின் கழுத்தில் யமனுடைய பாசம்போல் சென்றுவீழ்ந்தது. அவர் திடுக்கிடாமல் "ஓம், சக்தி", "ஓம் சக்தி" என்ற மந்திரத்தை ஜபித்து மனதைத் தைரியப்படுத்திக்கொண்டார். பிறகு அதே மாலை மீண்டும் பரிமள கந்தமுடைய புஷ்பமாலையாய் மாறிவிட்டது

இதனை மகரிஷியானவர், அந்த ராஜனிடத்திலே காட்டி, "இல்லறத்தில் வாழ்ந்தால் இப்படிப்பட்ட தைரியத்துடன் வாழவேண்டும். மணமாலையே பாம்பாக வந்து விழுந்தபோதிலும் மனம் பதறக்கூடாது.

தைரியம் பாம்பைக்கூட மணமாலையாக மாற்றிவிடும். இவ்விதமான தைரியத்துடன் நிற்பார் வீடு பெறுவர். துறவறத்துக்கும் இதுவே வழி. ஆகவே இரண்டும் ஒன்றுதான் என்று சொன்னார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாம்அர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.


# இந்து சாதனம்.

யாழ்ப்பாணம், சர்வசித்துஞூ
புரட்டாதி உ௪ வ வெள்ளிக்கிழமை


## "சுதந்திரம்" என்றுலென்ன?
II

அயிரோப்பிய சாதியினர் சுதந்திரம் சமாதானமென வாய்ப்பறை யறைகின்றனரெனினும், உண்மையான சுதந்திரத்தை அவர்கள் கண்டவர்களல்லரெனலாம்; அந்நிய நாடுகளைக் கைப்பற்றி அந்நாடுகளிலுள்ள மக்களை அடக்கியாள வேண்டுமென்ற நோக்கமும், தம்மிடம் அகப்பட்ட அந்நிய நாட்டின் பொருளை அந்நாட்டினர்க்குப் போதியதா யிருந்தாலென்ன, இல்லா தொழிந்தாலென்ன, தம் நாட்டினர்க்கே உபயோகப் படுத்த வேண்டுமென்ற நோக்கமும் அதிகார விடாயும் மித்திர பேதமும் இருக்கும் வரையில் அயிரோப்பிய சாதியினர் உண்மையான சுதந்திரத்தை யடைதல் அரிதெனலாம்; தம் அதிகாரத்துக் குட்பட்ட மற்றைச்சாதி மக்களுக்குச் சுதந்திரங் கொடுக்கப் பின்னிற்கும் மேனாட்டினர், தாம் சுவதந்திரத்தைப் பெறுவதெப்படி? இருசாதி மக்கள் ஒரு நாட்டில் வசிப்பின் அம்மக்களைப் பிரித்தாளவேண்டுமென்ற பொல்லா எண்ணங் கொண்ட அயிரோப்பிய ராச்சியங்கள், தாம் தம் நாட்டிலே சுதந்திரத்தோடு வாழ்வது எவ்வாறு? தம்மைப் போல் மற்றைநாட்டு மக்களும் சுவதந்திரத்தை யடையவேண்டுமென்ற நோக்கம் வருங்காறும் எச்சாதியாராக, எந்நாட்டினராக, சுதந்திரத்தின் பெருமையை யுணர்வதும் அதனை யடைதலும் இல்லையாம்; மேலும் அயிரோப்பிய சாதியினர் எல்லாரும் சுதந்திரராய், சமாதான வாழ்க்கையோடு கூடியவராய் இருத்தல் வேண்டுமென்ற நோக்கங் கொண்டுளரேல், மகா யுத்தத்திற்குப்பின் உலக யுத்தமும், கலகத்தின் பின் கலகங்களும் நேரமாட்டா.

இனி, மேலைத்தேசத் ததிகாரிகள் நீடித்த பெரிய யுத்தங்களின் முடிவிலே செய்யும் சமாதானமும் ஒருபோதும் நிலையான சமாதான மாகமாட்டாதென்பதை நாம் அனுபவத்திலேயே கண்டுள்ளேம்; காரணமென்ன? அயிரோப்பிய ராச்சியங்கள் பல இரண்டு பட்டுத் தொக்கு நின்று வருடக் கணக்காக யுத்தஞ் செய்து ஈற்றில் வெல்லுந்தொகுதி கரியின் நிலையையும், தோல்வியுறும் பகுதி சாம்பரின் நிலையையும் அடையும்; அப்படியாக வென்ற பகுதியினர் தோல்வி யுற்றவர்களுடைய நாட்டிலுள்ள செல்வம் எல்லாவற்றையும் கவர்ந்து கொண்டு, தோல்வியுற்ற பகுதியில் எஞ்சிய வீரர்களையும் யுத்தக் குற்றவாளிகளெனக் கண்டு கொலைசெய்து நிர்மூலமாக்கிவிடுவார்கள்; நிர்மூலமாக்கிவிட்டால் இனி அவர்கள் உய்யமாட்டார்களென்பதுதான் அவர்கள் கொண்ட பிழையான கருத்து. தெய்வத்தாலன்றி, கேவலம் சின்னாட் பல்பிணிச் சிற்றறிவினராகிய இந்த மனுஷரால் ஒரு சாதியினரை ஒருநாட்டு மக்களை நிர்மூலமாக்க முடியாது; இப்படித் தோல்வியுற்ற நாடும் நாட்டினரும் பாழாய்விட, அந்த வென்ற தொகுதியினர் சமாதானத்தை ஆக்க முயற்சிப்பார். தோல்வியுற்ற நாடுகளைப் பங்கிடுதலிலும், கொள்ளைப் பொருள்களைப் பங்கிடுதலிலும் அந்த வென்ற ராச்சியத்தினர்க்கிடையே பிணக்கும் காலகதியிற் பகைமையும் புறங்காட்டாவெனினும் அகத்தே மறைந்திருக்கும்; இப்படியான நிலைமையிலேதான் அவர்கள் உலக சமாதானத்தை ஆக்க முயல்கிறார்கள்; உலக சமாதானத்தை விளம்பரஞ் செய்யும்போதே, அடுத்த உலகயுத்தம் எப்போது தொடங்குமென்பதை அந்த வென்ற கட்சியினரும், ஏனைய சாதியினரும் அயிர்த்துக்கொள்வர்; அச்சத்தினாலே மூடனுக்கும் மூடனுக்கும் சிநேகமுண்டாகின்றதென்ற கருத்துப்படப் பஞ்சதந்திரத்தில் ஒரு வாக்கியமுண்டு; அதுபோலவே மேனாட்டார் சொல்லும் சமாதானமும் வென்ற சாதியினர் பரஸ்பரம் கொண்ட அச்சத்தினால் ஆவதாகும்; அப்படியான சமாதானம் ஒருபோதும் நிலைநிற்கமாட்டாது; அச் சமாதானத்தோடு கூடிய ராச்சியமும் சுயராச்சியமாகமாட்டாது.

சுதந்திர மெனப்படுவது ஒருவர் கொடுக்க இன்னொருவர் ஏற்கும் பொருளோ என்பது சந்தேகம்; அப்படித்தா னிருந்தாலும், கொடுப்பவர் மனப்பூர்வமாகக் கொடுக்க ஏற்பவர்களும் மனப்பூர்வமாக ஏற்று அந்தச் சுதந்திரத்தின் அருமை பெருமைகளை உள்ளபடி விளக்கிக் கொண்டு சாதிபேதம், மதபேதம் அதிகாரவேட்கை யென்னுமிவைகளை யொழித்து இறைவனருளை முன்னிட்டு நடுவு நிலையோடு பரிபாலனஞ் செய்வரேல் அப்படியான சுதந்திர பரிபாலனம் நீடித்தகாலம் நின்று நிலவுதலுங் கூடும்; சுதந்திரத்தின் உண்மையான அருமை பெருமைகள் நன்மைகளை உள்ளபடி அறிந்தவர்கள் மகாத்மாகாந்தி, பண்டிதர்நேரு முதலிய அரசியன் ஞானிகளே யாவர்; அப்படியானால் இந்தியநாடு இப்பொழுது பெற்றுக்கொண்ட சுதந்திரம் இப்படியெல்லாம் ஏன் கிடந்து இடர்ப்படுகின்றதென்று கேட்டால், பிருத்தானியர் மனப்பூர்வமாக அச் சுதந்திரத்தை உதவவில்லை யெனவும், அதனை யேற்றவர்களு ளொருவராகிய மிஸ்ரர் ஜின்னு உண்மையான சுதந்திர நோக்கத்தோடு ஏற்று நடத்த நினைக்கவில்லை யெனவும் விஷய மறிந்தோர் சொல்லுகிறார்கள்.

இனி, இலங்கைக்கு இப்பொழுது கொடுக்கப்படும் நாந சுதந்திரத்தால் ஏதும் பயனுண்டாமோவெனின், இதனை ஏற்கும் இலங்கை மக்கள் தம்முட் பேதப்பட்டுப் பிணக்குற்று எனக்குனக்கென்று வாதாடியபடி ஏற்கிறார்களாதலின், இதுவும் நிலையான சுதந்திரமாகமாட்டாதெனவும், இந்த நாநசுதந்திரத்தினால் இலங்கை மக்களுக்கிடையே வறுமையும் பிணக்கும்உண்டாகுமேயொழிய, நன்மை யுண்டாமெனக் காத்திருக்கலாகாதெனவுஞ் சொல்லலாம்.

இந்தச் சுதந்திரம் அகப்படாதொழியின், அறிஞர்கள் கீழே சொல்லப்படும் சுதந்திரத்தில் ஆறுதலடைந்திருப்பர், அதுவே உண்மையான சுதந்திரம்; அது என்னையெனிற் காட்டுகின்றேம்:

"தாயும் பகைகொண்ட பெண்டீர்
பெரும்பகை தன்னுடைய
சேயும் பகையுறவோரும்
பகையிச் செகமும்பகை
ஆயும் பொழுதிலருஞ்
செல்வநீக்கிலிங் காதலினால்
தோயுநெஞ்சே மருதீசர்
பொற்பாதஞ் சுதந்திரமே"

# உலகம் பலவிதக் கதை

(முற்றொடர்—34)

### 'இது நான் செய்த புண்ணியப் பயன்"

"வேறொன்றுமல்ல, எனக்கு மகள் முறை பூண்ட ஒருபெண்பிள்ளை இருக்கிறாள்; அந்தப் பிள்ளை சோறும் ஆக்கித் தந்து இன்னும் ஆகவேண்டிய பணியைச் செய்துகொண்டு என் வாசஸ்தானத்தில் இருக்க, நான் அப்பிள்ளையைப் பாதுகாத்துக்கொண்டு வேறெங்கும் போகாமல் இந்தவூரிற்றானே சிலகாலம் வசிக்கலானேன்: இப்பொழுது நான் காசியாத்திரை புறப்படுவதென்றால், அப்பிள்ளையை நான் வசிக்கும் வீட்டிலே தனியே இருக்கவிட்டுப் புறப்படமுடியாது; ஆனதால் மகளே, நீரும்எனக்கொரு மகள்தானே, நான் காசி யாத்திரை போய் மீண்டு வரும்வரை உம்மோடு அந்தப் பிள்ளையையும் இருக்க வைத்துப் போகலாமென உத்தேசித்திருக்கிறேன்" என்றார் சுவாமியார்; கேட்ட பாக்கியலட்சுமி உள்ளத்தில் அடங்கா ஆநந்தங் கொண்டாள். "சுவாமி, நல்லது சொன்னீர்கள்; இதனையா உங்களுக்கு நாங்கள்செய்யவேண்டிய உபகாரமென்று சொன்னீர்கள்; இது நீங்கள் உங்கள் மகளாகிய எனக்குச் செய்யும் பெரிய உபகாரமல்லவா சுவாமி, என் அருமையான அக்காளைப் பிரிந்து பெண் துணையன்றித் தன்னந்தனியே இருக்கும் எனக்கு, நீங்கள் அருமையான ஒரு தங்கைச்சியை அழைத்துக்கொண்டு வந்து என்னுடன் இருக்கச் செய்வதென்றால், இது நான் செய்த புண்ணியப் பயனல்லவோ; அந்தத் தங்கைச்சியை இன்றைக்கே சுவாமி, இங்கே அழைத்துக்கொண்டு வந்து என்னிடம் ஒப்புவிக்கிறீர்களா? இல்லையேல், நானே சாமியோடு ஒரு மோட்டார் ரதத்தில் வந்து என் தங்கைச்சியை அழைத்துக்கொண்டுவரலாமா?, நான் இங்கே இருப்பது என் தங்கைச்சிக்குத் தெரியுமா?" என்று ஆவலோடு சுவாமியைப் பாக்கியலட்சுமி வினவினாள்; "மகளே, உமது இஷ்டம்போற் செய்யலாம்" என்றார் சாமியார்; பாக்கியலட்சுமி பக்கலில் நின்ற தன்கணவனை அன்புடன் பார்த்து "நான் சாமியாருடன் போய் அந்தத் தங்கைச்சியை அழைத்துவருவது உங்களுக்குஞ் சம்மதமென்றால், இப்பொழுது போய் அழைத்து வருதற்கு ஒரு மோட்டார் ரதம் ஒழுங்குபண்ணுங்கள்" என்று வேண்டுதலும் ஈஜபரத்தினம் "இப்படியான நல்ல கருமத்திற்கு என்னிடம் சம்மதங் கேட்கவேண்டுமா? நான் இப்பொழுதே போய் ரதமொன்று ஒழுங்கு பண்ணிக்கொண்டு வருகிறேன்: எங்கள் சாமியாரும் நீரும் போய் அந்தத் தங்கைச்சியைக்கூட்டிக்கொண்டு வருவதுதான் முறையென நினைக்கிறேன்" என்று சொன்னான்; சொல்லும்போது சுவாமியார் புன்சிரிப்புச் செய்து "என்ன மகளே, கோமுட்டிச் செட்டி தேவியிடம் வரங் கேட்டதுபோல், உமது கணவனிடத்தில் ஒரே முறையில் இரண்டுவரங் கேட்டுப் பெற்றுக்கொண்டீர்" என்றார்; பாக்கியலட்சுமி சற்று யோசித்துவிட்டுச் 'சுவாமி, நீங்கள் சொல்வது எனக்குப் புலப்படவில்லை" என்று பணிவுடன் சொன்னாள்.

### கோமுட்டி வரங்கேட்ட வரலாறு

"வேறொன்றுமல்ல மகளே, ஒரே வாக்கியத்தில் நீர் உம்முடைய தங்கைச்சியை இங்கே அழைத்து வருதல் உமதுகணவருக்குச் சம்மதமோ என்பதையும், நீராகவே ரதத்திற் போய்த் தங்கைச்சியை அழைத்து வருதல்உடன்பாடோ என்பதையும்" போய்வருவது இரதத்திலேதான் என்பதையும் ஏககாலத்திலே கேட்டுச் சம்மதம் பெற்றுக்கொண்டீரே யென்பதையிட்டுத்தான் சிரித்தேன்" என்றார். தன்னைப்பற்றிப் புகழ்ந்து சாமியார் சொல்லுவதைக் கேட்ட மாத்திரத்தே பாக்கியலட்சுமி சற்று நாணமுற்றாளாய், பின்னரும் சுவாமியைப் பணிவுடன் பார்த்து, சுவாமி "கோமுட்டிச் செட்டி தேவியை வரங்கேட்ட வரலாற்றைச் சொல்ல வேண்டுமெனக் கேட்டலும், சுவாமியார் சொல்ல இருவருங் கேட்பாராயினர்:—

"கோமுட்டிச் செட்டியொருவன் மகா தரித்திரன், சந்ததியற்றவன், விருத்தன் பிறவிக் குருடன், செய்வதின்னதென் றறியானாய்க் கவலைப் பட்டுக் கொண்டிருந்தான்; அவன் மீது பரிவுகொண்ட ஒரு பெரியவர் அவனைப் பார்த்து, "ஏ வணிகனே, நீ தேவியைக் குறித்துத் தவஞ் செய்வாயானால், அத்தேவி வாயிலாகச் சகல செல்வங்களையும் பெற்றுக் கடைத்தேறுவாய்" என்று சொல்லிச் சென்றார்; அந்தப் பெரியவர் வாக்கை உபதேசமாகக் கொண்ட செட்டி, அன்று தொடக்கம் புனிதமான முறையில் தேவியைத் தியானித்துச் சிலகாலம்விரதங்கிடந்தான், இப்படியாக ஒருதினம் தேவி அவன் முன்னிலையிலே வந்து தோன்றினாள்; செட்டி பேராசை பிடித்தவன் என்பதை உணர்ந்த அந்தத்தேவி அவனை நோக்கி "ஏ, அன்பனே, நீ பல வரங்களைக் கேட்டால் நான் தரமாட்டேன்; ஏதும் ஒரேயொரு வரத்தை மாத்திரங் கேள் தருவேன்" என்றாள். வணிகன் சற்றுநேரம் யோசித்துவிட்டு, தேவியைவணங்கி 'தாயே, நான் பல வரங்களைக் கேட்கவில்லை: ஒரேயொரு வரம்மாத்திரங் கேட்கிறேன் தந்தருள்க; வேறொன்றும் வேண்டாம்; என் பேரப்பிள்ளைக்கு எனது மருமகள் வெள்ளிக் கிண்ணத்திலே அன்னம் பிசைந்து, மூன்றடுக்கு மாளிகையிலுள்ள மேன்மாடத்திலிருந்து உணவூட்ட, நான் அதைக் கண்ணாரப்பார்க்கவேண்டும்; அம்மா, தாயே இந்த ஒரு வரம் மாத்திரம் தந்தாற் போதும்" என்று மீளவும் பணிந்தான்; தேவி புன்முறுவல் பூத்துச் செட்டியின் புத்தி சாதுரியத்தை மெச்சி "அப்படியே உனக்கு வரந்தந்தேன்" என்று சொல்லி மறைந்தாள்; செட்டியும் அவ்வரங்களையெல்லாம் பெற்று வாழ்ந்தானென்பது கதை; செட்டி தன் பேரப்பிள்ளைக்கு மருமகள் உணவூட்ட என்றதனால்,

தொடர்ச்சி 5ம் பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை

## 59-வது ஆண்டு அறிக்கை

இறைவன் திருவருளை முன்னிட்டு இச் சபையின் நிருவாகசபை மகாசபைக்குத் தனது 59-வது ஆண்டறிக்கையைச் சமர்ப்பிக்கின்றது. இச் சபையின் 58 வது வருடாந்தக்கூட்டம் 8-9-46 ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் நடைபெற்றது. இப்பொழுது படிக்கப்படும் அறிக்கை 1946-ம் ஆண்டு ஏப்பிரல் மாசம் தொடக்கம் 1947 ம் ஆண்டு மார்ச்சு மாதம் முடிய இச்சபை ஆற்றிய பணிகளைப்பற்றியும் சபையின் தற்கால நிலைமையைப்பற்றியும் சபையின் அபிவிருத்திக்குரிய வழிவகைப்பற்றியும் கூறும்.

1946 ம் ஆண்டு ஏப்பிரல் மாதத்தொடக்கத்தில் இச்சபையின் அங்கத்தினர் தொகை 174; 1947 ம் ஆண்டு மார்ச் மாதம் முடியவுள்ள அங்கத்தினர் தொகை 186

குறித்த காலத்துள் 13 நிருவாகசபைக் கூட்டங்கள் நடைபெற்றன. சபையின் தொண்டுகளைச் செவ்வனே புரிய நூற்பிரசுரஉபசபை, புண்ணியகாச்சி மடதரும உபசபை, யந்திரசாலை உபசபை, சமயபரிபாலன உபசபையென நான்கு உபசபைகள் நிறுவப்பெற்றன.

9 6-46 ல் நடைபெற்ற நிருவாகசபைக் கூட்டத்தில், சைவபரிபாலன சபையின் நிருவாகசபை அங்கத்தவருள் ஒருவராயிருந்தவரும், நமது நாட்டின் பொதுநலத்துக்குப் பன்னெடுங்காலம் உழைத்து வந்தவருமகிய நல்லூர் வழக்கறிஞர் திரு. வெ. மு. சரவணமுத்து அவர்கள்பிரிவைக் குறித்தும் 14-8-46 ல் நடைபெற்ற நிருவாகசபைக் கூட்டத்தில் சைவப்பிரகாச யந்திரசாலையினதும் இந்துசாசன ஆங்கில தமிழ்ப் பிரசுரங்களினதும் அதிபராகவிருந்து அவற்றை நன்னிலைப்படுத்தி வந்து தமிழுக்கும் சைவத்துக்கும் தொண்டாற்றிய திரு. சி. பொன்னுச்சாமி அவர்கள் பிரிவைக் குறித்தும், சைவபரிபாலன சபையினதும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அதிகார சபையினதும், நீண்டகால அங்கத்தவராக விருந்து சைவ சமயத்துக்கும், கல்வி அபிவிருத்திக்கும். தொண்டாற்றிய முதலியார் திரு பொ இராசகோபால் அவர்கள் பிரிவைக் குறித்தும் அநுதாபத் தீர்மானங்கள் நிறைவெய்தின.

### சபை ஆச்சிரமம்

சென்ற வருடாந்தக் கூட்டத்தில் எங்கள் சபைக்குச் சொந்தமான காரியாலயமும், ஆச்சிரமமும் அவசியம் தேவையென்ற தீர்மானத்தைத் திரு. அ. கனகசபாபதி அவர்கள்பிரேரிக்க அதனைத்திரு. இ. நாகலிங்கம் அவர்கள் அநுவதிக்கக்குறித்த தீர்மானம் சர்வாங்கீகாரமாக நிறைவேறியது. ஷை நிர்ணயத்தின் பிரகாரம் 22 9-46 ல் நடைபெற்ற நிருவாகசபைக் கூட்டத்தில் யாழ்ப்பாணம் சைவப்பிரகாச யந்திரசாலைக்கும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரிக்கும் அணித்தாகக் கல்லூரி வீதியில 10 இலட்சம் வரையுள்ள ஒரு நிலத்தை விலைக்கு வாங்க ஒழுங்குகள் செய்து சபையின்பேருக்கு ஷை நிலம் கடன்பெற்று அறுதி வாங்கப்பெற்றது. நிலத்தின் பெறுமதிக்கும் காரியாலயம் ஆச்சிரமம் வாசகசாலை முதலிய ஸ்தாபனங்களை நிறுவுதற்கும் ஒரு லட்சம் ரூபா வரையில் தேவையாக இருக்கிறதெனவும், அத்தொகையைச் சைவாபிமானிகள் கொடுத்துதவவேண்டு மெனவும், இந்துசாதனம் தமிழ் ஆங்கிலப் பிரசுரங்களில் விண்ணப்பஞ் செய்ததன் பயனாக மலாயாவிலும் இலங்கையிலும் உள்ள சைவாபிமானிகள் சபை ஆச்சிரம நிதிக்கு 31-3-47 வரை ரூபா 1940 சதம் 00 உதவியிருக்கின்றனர். இத்தொகை சபையின் நோக்கத்தைப் பூர்த்தி செய்வதற்கு தேவையான முழுத்தொகையின் மிகமிகச் சிறிய பாகமாகவிருக்கின்றது. சபையின் நிருவாகசபை அங்கத்தவர்கள் கூடிய சிரத்தைகொண்டால் தேவையான பணத்தை விரைவில் சேர்க்கமுடியும். அங்ஙனம் அவர்கள் செய்யாவிட்டால் குறித்த நோக்கத்தைப் பூர்த்திசெய்து சபையின் 60வது ஆண்டு விழாவை அடுத்த வருடம் மங்களமாகக் கொண்டாடல் இயலாதாகும். நமது நாட்டிற் சென்ற 59 வருடகாலமாகச் சைவத் தொண்டும், தமிழ்த் தொண்டும் பொதுநலத் தொண்டும் புரிந்து வருகின்ற சபைக்குச் சொந்தமான ஒரு காரியாலயம் இல்லாமை வருந்தத்தக்கதல்லவா? இக் குறையை நீக்கச் சைவாபிமானிகள் யாவரும் முன்வருவார்களென எதிர்பார்க்கிறோம்.

### குருபூசைகளும் சைவப்பிரசங்கங்களும்

சபைக்குச் சொந்தமான ஒரு நிலையம் இல்லாமையினால் சென்ற சில வருடங்களாக வாடகைக் கட்டடங்களில் நடந்திவந்த புராணபடனம், திருமுறைப்பாராயணம் முதலிய சற்கருமங்களை இப்பொழுது நடத்துதல் முடியாமலிருக்கின்றது இக்கடமைகளை இப்பொழுது நடத்த வாடகைக்கும் பொருத்தமான கட்டடத்தைத் தேடிக்கொள்ளவும் முடியவில்லை.

இப்பொழுது நால்வர் குருபூசைகளும் மற்றைய குருபூசைகளும் நீராவியடித் திலகவதியார் மடத்தில் சமயோசிதமாக நடைபெற ஒழுங்கு செய்துள்ளோம். குருபூசைத் தினங்களிற் பகற்காலத்தில் ஷை மடத்தில் கடவுள் வழிபாடு நால்வர் பூசை புராணபடனம் மாகேசுர பூசை முதலிய செயல்கள் நடைபெறுகின்றன. இராக்காலங்களிற் சைவப் பிரசங்கங்கள் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்திற் செய்யப்படுகின்றன. மாகேசுர பூசைக்குப் புண்ணியகாச்சிமட தருமத்திற்குரிய நெல்லின் ஒருபாகத்தை உபயோகிக்கிறோம்.

யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலையில் 27-7-47 ல் திருநாவுக்கரசு நாயனார் குருபூசைத் தினத்தன்று ஸ்ரீமத் ந சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் "திருநாவுக்கரசு நாயனார்" எனனும் பொருள்பற்றி ஓர் பிரசங்கஞ் செய்தார்கள். இச்சபை ஆதரவில் திருமயிலை ஸ்ரீமதி கா. சோ. காஞ்சனமாலை யம்மையார் 19-4-46 இல் சரவணை நாச்சிமார் கோவிலில் "காரைக் காலம்மையார்" என்னும் பொருள்பற்றியும், 20-4-46இல் புங்குடுதீவுகிழக்கு விநாயகர் ஆலயத்தில் "பார்வதி கல்யாணம்" என்னும பொருள்பற்றியும், 21 4-46 இல் நயினாதீவு நாகபூஷணி வித்தியாலயத்தில் "சுதன்மை யருள்புரி படலம்" என்னும் பொருள்பற்றியும், 22-4-46 இல் நெடுந்தீவு நடுக்குறிச்சி செல்லம்மா வித்தியாசாலையில் D. R. O திரு. இ. சிதம்பரப்பிள்ளை அவர்கள் தலைமையில் "சைவசமய மாட்சி" யென்னும் பொருள் பற்றியும், 23-4-46 இல் முற்பகல் 10 மணிக்கு நெடுந்தீவு மேற்குச் சைவப்பிரகாச வித்தியாசாலையில் "சைவசாதனங்கள்" என்னும் பொருள் பற்றியும்; 22—4—46 இல் இரவு 7 மணிக்கு வேலணைமேற்கு விநாயகர் ஆலயத்தில் "என்நாயகன்" என்னும் பொருள் பற்றியும் அரிய பக்திச்சுவை ததும்பும் சைவப் பிரசங்கங்கள் செய்தார்கள். 3—6—46 இல் சேக்கிழார் நாயனார் குருபூசைத் தினத்தன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலையில் பண்டிதர் மு. வேதநாயகம் அவர்கள் "சேக்கிழார்நாயனார்" என்னும் பொருள் பற்றிப் பிரசங்கஞ் செய்தார்கள். 4—6—46 இல் சுந்தரமூர்த்தி நாயனார் குருபூசைத் தினத்தன்று யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித்தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் ஸ்ரீமத். ந. சோமசுந்தரக் குருக்கள் தலைமையில் வித்துவான் திரு க. கார்த்திகேசு அவர்கள் "சுந்தரமூர்த்தி சுவாமிகள்" என்னும் பொருள்பற்றி உபந்நியாசம் செய்தார்கள் 14—6—46 இல் சபை ஆதரவில் அருணகிரிநாதர் திருநாள் கொண்டாடப்பெற்றது. ஸ்ரீமத். ந சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் தலைமையில் மேற்படி வித்தியாசாலை மண்டபத்தில் திக்கம் திரு. சி. செல்லையாபிள்ளை அவர்கள் "அருணகிரிநாதர்" என்னும் பொருள்பற்றி ஒரு பிரசங்கஞ் செய்தார்கள். 13—7—46 இல் மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசைத் தினத்தன்று நாவலர் சைவப்பிரகாச வித்தியாசாலை மண்டபத்தில் வித்துவான் திரு ந. சுப்பையபிள்ளை அவர்கள் தலைமையில் திரு. சே. க. சண்முகம்பிள்ளை அவர்கள் "திருவாசகம்" என்னும் பொருள் பற்றியும் [illegible] "ம[illegible]யும்" என்னும் பொருள்பற்றியும் சொற்பொழிவுகளாற்றினார்கள், 20—7—46 இல் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி மேன் மண்டபத்தில் இராசவாசல் முதலியார் திரு. A நாகநாதர் அவர்கள் தலைமையில் ஸ்ரீ S. D. ஆச்சாரிய சுவாமி அவர்கள் "தினசரிச் சமய வாழ்க்கை" என்னும் பொருள்பற்றி ஆங்கிலத்தில் ஒரு பிரசங்கஞ் செய்தனர், 13—12—46 இல் நாவலர் குருபூசைத் தினத்தன்று ஸ்ரீமத். ந. சோமசுந்தரக் குருக்கள் அவர்கள் தலைமையில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித்தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் பண்டிதர் திரு. கா நமசிவாயம் அவர்களும், வழக்கறிஞர் திரு. அ. அருளம்பலம் அவர்களும "ஆறுமுகநாவலர்" என்னும் பொருள்பற்றிய பிரசங்கங்கள் செய்தார்கள்.

### யாழ்ப்பாணம் சிறைச்சாலைச் சைவப்பிரசங்கம்

சபை ஆதரவில் திரு வி சின்னையா உபாத்தியாயர் அவர்கள் யாழ்ப்பாணம் சிறைச்சாலையில் ஞாயிற்றுக்கிழமை தோறும் சைவப்பிரசங்கஞ் செய்து வந்தனர். 12—4—46 இல் விய வருடப் பிறப்பன்று யாழ்ப்பாணத்திலுள்ள சைவாபிமானிகளிடம் பணவுதவி பெற்றுத் திரு வி. சின்னையா உபாத்தியாயர் மேற்பார்வை செய்து சைவ மறியற் கைதிகள் விசேஷ கடவுள் வழிபாடு செய்யவும் சிற்றுண்டி அருந்தவும் ஒழுங்குகள் செய்தோம். அன்று திருப்புகழ் திரு. வ. சுப்பிரமணியம் அவர்கள் "மனிதவாழ்க்கை" என்னும் பொருள்பற்றி இடையிடையே திருமுறைகளும் திருப்புகழும் பொருள் விளக்கத்துடன ஓதி ஒரு அரிய சொற்பொழி வாற்றினர். 19—5—46 தொடக்கம் திரு வி சின்னையா உபாத்தியாயர் அவர்கள் உடல்நலக் குறைவால் மறியற்சாலைப் பிரசங்கத்தை நிகழ்த்த முடியாதொழிய திரு. வே. கந்தையா அவர்கள் அவரிடத்துக்கு நியமனஞ் செய்யப் பெற்றனர். 10—11—46 வரைக்கும் திரு. வே. கந்தையா அவர்கள் மேற்படி கடமையாற்றி வந்தனர். அதன்மேல் திருவாளர்கள் வ. கார்த்திகேசு அவர்களும், சே. க. சண்முகம்பிள்ளை அவர்களும், பொ. அப்புக்குட்டி அவர்களும தினத்துக்கு ஒருவராக ஞாயிற்றுக்கிழமை தோறும் மேற்படி கடமையை ஆற்றி வருகின்றனர்

### சுவபாஷா விசாரணைச் சபை

6—4—46 இல் யாழ்ப்பாணம் நகரமண்டபத்தில் சைவபரிபாலன சபைப் பிரதிநிதிகளாகச் சுவபாஷா விசாரணைச் சபைக்கு முன்பாகத் திருவாளர்கள்: சு சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களும், இ சிவகுருநாதர் அவர்களும் பொ. அப்புக்குட்டி அவர்களும், மு. மயில்வாகனம் அவர்களும் சாட்சியங் கூறினார்கள். இலங்கையில் தாய்மொழிமூலம் கல்வி கற்பிக்க ஒழுங்கு செய்ய வேண்டு மெனவும் தாய் மொழிகளே அரசியற் பாஷைகளாக அமைய வேண்டு மெனவும் சாட்சியங் கூறினார்கள்.

### சைவாசிரியர் விடுமுறைகால வகுப்பு

28—4—46 லும் 29—4—46 லும் சைவாசிரியர்களின் சமய வளர்ச்சிக்காகவும், அவர்கள் சைவசமய பாடங்களைப் படிப்பிக்கும் முறைகளை அறிதற்காகவும், யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலையில் முறையே சைவத் திருவாளர்கள்: சு. சிவபாதசுந்தரம்பிள்ளை அவர்களாலும், அ. விசுவநாதன் அவர்களாலும் சைவாசிரியர்கள் விடுமுறைகாலச் சமய பாடவகுப்பு நடத்தப் பெற்றது. அவர்கள் படிப்பித்த பாடங்கள்: (அ) சமயத்தின் இயல்பு சைவ சமய நூல்கள், (ஆ) பாசங்களின இயல்பு ஆணவம் மாயை (தத்துவங்களும்) கர்மம், கர்மவிதி, (இ) பதி, (ஈ) உயிர், (உ) தீட்சைகள் சரியை, கிரியை, யோகம், ஞானம் (ஊ) பலவகைப்பட்ட முத்திகள்; குறித்தவகுப்பை வடமாகாணத்தில் யாழ்ப்பாணப் பட்டினத்திலும, பருத்தித் துறையிலுமாக இரு [illegible] நடத்துவதாக விளம்பரஞ் செய்திருந்தோம் போதிய ஆசிரியர்கள் மனுப்பண்ணத் தவறினமையால் குறித்த வகுப்பை யாழ்ப்பாணத்தில் மாத்திரம் நடத்தினோம்.

### தேவார வகுப்பு

சைவாசிரியர்கள் தங்கள் பாடசாலைகளில் தேவார திருவாசகங்களை முறையாகக் கற்பித்தற்கு ஏதுவாகச் சைவாசிரியர்களுக்கென திரு. த. குமாரசுவாமிப்பிள்ளை அவர்களை ஆசிரியராக நியமனஞ் செய்து ஒரு தேவார வகுப்பை ஞாயிற்றுக்கிழமைதோறும் முற்பகலில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் நடத்தும் நோக்கமாக 19-5-46ல் ஆரம்பித்தோம் சில மாதங்களின்பின் ஆசிரியர்களும் மாணவர்களும் குறித்த தேவார வகுப்பில் பங்குபற்றிப் பயனடையக்கூடியதாக வகுப்பை இரு பிரிவுகளாக நடைபெறச் செய்தோம். ஷை வகுப்பு இறைவனருளால் இன்றும் நடைபெற்று வருகின்றது. தேவார திருவாசகம் முதலிய சைவத் தெய்வப் பன்னிரு திருமுறைகளும் நமது நாட்டில் முறையாக ஓதப்பெறுதற்குத் தேவார வகுப்பு இன்றியமையாத சாதனமாகும். சைவத்தையும் தமிழையும் பரிபாலிப்பதற்குத் தோன்றியுள்ள சபைகள் நாட்டின் பல பாகங்களிலும் தகுந்த ஆசிரியர்களை நியமனஞ் செய்து தேவார வகுப்புகளை நடத்த ஒழுங்கு செய்யுமாயின் அதுவே பெரிய சிவத்தொண்டாகும்.

### கத்தோலிக்கமதத் தாபனச் சூழ்ச்சி

நீர்வேலிச் சைவஇளைஞர் சங்கக் காரியதரிசி புத்தூர் மேற்கு நவக்கிரியில் கத்தோலிக்கர் சிலர் அங்குள்ள பள்ள வகுப்பினருடைய அண்ணமார் கோவிலை அழித்து, ஒரு கிறீஸ்தவகோவில் கட்டினமை பற்றியும், அப் பள்ளவகுப்பு மக்கள்சிலரை மதமாற்றஞ் செய்ய முயன்றமைபற்றியும், எங்கள் சபைக்கு எழுதிய கடிதம் 14-7-46ல் நடைபெற்ற நிருவாகசபைக் கூட்டத்தில் யோசித்து ஷை கடிதத்தில் காட்டிய சம்பவங்களை விசாரணை செய்யத் திருவாளர்கள்: அ கனகசபாபதி, பொ. அப்புக்குட்டி, தி. இராசநாயகம், ச. செல்வராசா மு. மயில்வாகனம் ஆகிய ஐவரையும் அங்கத்தவராகக் கொண்ட ஒரு உபசபை நிறுவப்பட்டது.

குறித்த உபசபை அங்கத்தவர்கள்; நீர்வேலி திரு கு. சிற்சபேசன் அவர்களையும் நவக்கிரி திரு. வே. சுப்பையா அவர்களையும் அங்கு அழைத்துச்சென்று 29-8 46ல் ஒரு விசாரணையை நடத்தி நிருவாகசபைக்கு ஷை விசாரணைபற்றி ஒரு அறிக்கையும் சமர்ப்பித்தார்கள். அவ்வறிக்கை 17-9-46 இந்துசாதனத்தில் வெளிவந்தது. நவக்கிரியிலுள்ள பஞ்சமர்கள் வழிபட்டு வந்த அண்ணமார் கோவில் நிலத்தை யாரோ ஒருவரிடம் காலஞ்சென்ற சுவாமி ஞானப்பிரகாசரின் உதவியினால் யாழ்ப்பாண விசப்பாண்டவர் அறுதியாகப் பெற்றனர். சுவாமி ஞானப்பிரகாசர் ஷை நிலத்தை ஆட்சியெடுத்து அதிலுள்ள அண்ணமார் கோவிலையும் வழிபாட்டுக்குரிய மூர்த்திகளையும் தறித்து ஒரு கிறீஸ்தவ கோயிலை அவ்விடத்தில் கட்டினார். இந்நிகழ்ச்சி சம்பந்தமாக பஞ்சமர்களுக்கும் சுவாமி ஞானப்பிரகாசருக்கும் வியாச்சியங்கள் நடந்தன. அங்கு 40 பஞ்சமக் குடிகள் இருக்கின்றனர். இதுவரை ஒருவரும இன்னும மதம் மாறவில்லை. நவக்கிரிப் பஞ்சமர் பொருட்டுப் பின் வரும் காரியங்களை நிறைவேற்றவேண்டுமென நிருவாக சபையார் தீர்மானஞ் செய்தார்கள்.

(அ) அவர்கள் வழிபடுவதற்கு ஓர் ஆலயம் அமைத்துக் கொடுப்பது.

(ஆ) பஞ்சம வகுப்புப்பிள்ளைகள் படிப்பதற்கு ஒரு பாடசாலையை அமைக்க ஒழுங்கு செய்தல்.

(இ) மாதந்தோறும் நவக்கிரிப் பஞ்சமர்களுக்கு சைவசமயப் பிரசங்கம் செய்ய ஒழுங்கு செய்தல்.

12—9—46 ல் சைவ பரிபாலன சபை ஆதரவில் நவக்கிரியில் கப்புறவு திரு க. ஏகாம்பர உபாத்தியாயர் அவர்கள் தலைமையில் ஒரு கூட்டம் யாவருக்கும் விபூதிப் பிரசாதம் வழங்கித் தேவார பாராயணத்துடன் ஆரம்பிக்கப்பட்டது. பலபஞ்சமர்களும் பிறரும் கூட்டத்தில் சமூகமாயிருந்தார்கள். தலைவரவர்களும் திருப்புகழ் திரு. வ. சுப்பிரமணியம அவர்களும் திரு. பொ. அப்புக்குட்டி அவர்களும்,

தொடர்ச்சி 4-ம் பக்கம்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை

3-ம் பக்கத் தொடர்ச்சி

பண்டிதர் திரு. செ. துரைசிங்கம் அவர்களும், திரு. வே. சுப்பையா அவர்களும், காரியதரிசியும் "சைவசமய மாட்சி", "சைவ சாதனங்களின் பெருமை", "தூய வுணவு", "உயிர்ப்பலி நீக்கம்" முதலிய விஷயங்களைப்பற்றிப் பிரசங்கங்கள் செய்தார்கள். மாதந்தோறும் அங்கு சமயப் பிரசங்கம் செய்யத் திருப்புகழ் திரு. வ. சுப்பிரமணியம் அவர்கள் நியமனஞ் செய்யப்பெற்றனர்.

### சைவமரபுக்கு மாறுன பாடபுத்தகங்கள்

9—2—47ல் நடைபெற்ற நிருவாகசபைக் கூட்டத்தில் பாட புத்தகங்கள சம்பந்தமாகக் கீழே காணப்படும் தீர்மானங்கள் நிறைவெய்தின:

1 'சைவசமயக்கொள்கைகளுக்கு மாறுன கருத்தமைந்த நூல்களை இலங்கையிலுள்ள பாடசாலைகளில் பாடபுத்தகங்களாக நியமிக்க வேண்டாமென இச்சபை வித்தியாதிகாரிகளையும பாடசாலை முகாமைக்காரர்களையும் ஆசிரியர்களையும் கேட்கின்றது."

2 "தப்பொழுது S. S. C. வகுப்புத் தமிழ்ப் புத்தகங்களுள் ஒன்றுகிய 'பாண்டவர் கதை' என்னும் நூலில் சில வரலாறுகள் பரம்பரையாகவுள்ள பாரதக் கதைக்கு முரணுக எழுதப்பட்டிருக்கின்றபடியாலும், அத்தகைய நூல் தமிழ் இளைஞர் உள்ளத்தில் பாரதம் என்னும் சிறந்த இதிகாசத்தின்கண் துவேசத்தை உண்டாக்கும்தன்மை வாய்ந்ததாகையாலும், அதனை நீக்கிப் பிறிதொரு நூலை அதற்குப் பதிலாக ஷெ பாடப் பரீட்சைக்குக் குறிக்கும் வண்ணம் இச்சபை வித்தியாகர்த்தரைக் கேட்டுக்கொள்கின்றது." இவ்விரண்டாம் பிரேரணை வித்தியாகர்த்தருக்கு அனுப்பப்பட்டதன் பயனுக R P. சேதுப்பிள்ளை அவர்களால் ஆக்கப்பெற்ற 'கிறீஸ்தவ தமிழ்த் தொண்டர்' என்னும் நூல் ஷெ 'பாண்டவர் கதை' என்னும் நூலுக்கு மாற்றுப் பாடமாக வைக்கப்பட்டிருக்கின்றதென வித்தியாகர்த்தர் எமக்குப் பதில் எழுதியுள்ளார்.

### சைவப்பிரகாச யந்திரசாலையும் இருபத்திரிகைகளும்

குறித்த காலத்துள் சைவப்பிரகாச யந்திரசாலை நிருவாகத்தில் அநேக மாற்றங்கள் நடைபெற்றன. ஷெ யந்திரசாலையைச் செவ்வனே நடத்தி வந்த திரு. சி. பொன்னுச்சாமி அவர்கள் சுகவீனங் காரணமாக 13-5-46 ல் ஓய்வுபெற, அவருடைய இடத்துக்கு திரு அ. கனகசபாபதி அவர்கள் நியமனஞ் செய்யப்பெற்றனர் திரு. அ. கனகசபாபதி அவர்கள் 9—2—47 ல் உடல்நலக்குறைவால் விலகிக்கொள்ள அவருடைய இடத்துக்கு திரு. சு பொ. கந்தையா அவர்கள் நியமனஞ்செய்யப்பெற்றனர். அவர்கள்கணக்கு வல்லுனராகவும் சமயபக்தி, சமயாபிமானம் நிறைந்துள்ளவராகவும் உள்ளவர் அவருடைய நிருவாகத்தில் சைவப்பிரகாச யந்திரசாலையானது உன்னதநிலையடைந்து சைவத்தொண்டும் தமிழ்மொழித்தொண்டும் சிறப்பாக ஆற்ற முடியும் என்பதற்கு ஐயமில்லை.

இந்துசாதன உபபத்திராதிபராக விருந்த திரு. S. நடராசா அவர்கள் 9-6-46 ல் விலகிக்கொள்ள அவருடைய இடத்துக்கு திரு. அ. க. சுப்பிரமணியம் அவர்கள் நியமனம் செய்யப்பெற்றனர். பின்னர் 18-8-46 ல் இந்துசாதன ஆங்கில உதவி ஆசிரியராகவிருந்த திரு. C. N. தேவராஜன் அவர்கள் விலகிக்கொள்ள அவருடைய இடத்துக்கும் திரு. அ. க. சுப்பிரமணியம் அவர்கள் நியமனஞ் செய்யப்பெற்றனர் ஆகவே இப்பொழுது இருபத்திரிகைகளுக்கும் திரு. அ. க. சுப்பிரமணியம் அவர்களே உதவி ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றனர். 8—12—46 ல் இந்துசாதன ஆங்கிலப் பிரசுரம் ஆறுபக்கம் கொண்ட வெளியீடாக்கப்பெற்றது

9—8—41 ல் நடைபெற்ற சபையின் 53-வது வருடாந்தக் கூட்டத்தில் இந்துசாதன ஆங்கிலப் பிரசுரத்தின் பத்திராதிபராகத் திரு. ஐ. வ. குலசிங்கம் அவர்கள் நியமனஞ் செய்யப்பெற்று அப்பத்திரிகையைச் செவ்வனே வெளியிட உதவி புரிந்தனர். 12—1—47 ல் திரு. ஐ. வ. குலசிங்கம் அவர்கள் சில வசதியீனங்கள் காரணமாக விலகிக்கொள்ள அவருடைய இடத்துக்குத் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் நியமனஞ் செய்யப்பெற்றனர். இந்துசாதனம் ஆங்கிலப் பிரசுரம் ஆரம்பமான காலந்தொடக்கம் சிறந்த அரசியல் ஞானமும் எழுத்து வன்மையும் தேசாபிமானமும், அஞ்சாமையும், நடுவுநிலைமையும் கொண்டுள்ள பெரியார்களைப் பத்திராசிரியர்களாகக் கொண்டு வெளிவந்தது. பொதுவாக இலங்கை மக்களதும் சிறப்பாக தமிழ் மக்களதும் நன்மைமையைப்பேணி அவர்கள் இந்துசாதன ஆங்கிலப் பிரசுரசரத்துக்குத் தேடிய புகழையும் பெயரையும் திரு. த. முத்துச்சாமிப்பிள்ளை அவர்கள் பாதுகாத்து வருவார் என்பது அவரது தலையங்கக் கட்டுரைகளால் நன்கு அறியக் கிடக்கின்றது. இந்துசாதனத் தமிழ்ப் பிரசுரத்தின் பத்திராதிபராகப் பண்டிதர் திரு. ம. வே. திருஞானசம்பந்தப்பிள்ளை அவர்கள் கடமையாற்றி வருகின்றார்கள். இவர் இப்பத்திரிகையோடு 35 வருட காலமாகத் தொடர்புள்ளவர். அவர் அரசியல்வாதங்களிற் பங்குபற்றாது சைவமரபையும் தமிழின் தூய்மையையும் பேணி பத்திரிகையை வெளியிட்டு வருகின்றமை பாராட்டற்குரியதாகும். இந்துசாதனம் தமிழ் ஆங்கிலமாகிய இரு பிரசுரங்களின் சந்தாக்காரர் தொகை இப்பொழுது மிகவுங் குறைவாக விருக்கின்றது, இந்துசாதன ஆங்கிலப் பிரசுரச் சந்தாக்காரர் தொகை 31—3—47 முடிய 595; இந்துசாதன தமிழ்ப்பிரசுரச் சந்தாக்காரர் தொகை 31—3—47 முடிய 910; சைவாபிமானிகளும் தமிழபிமானிகளும் தங்கள் சமயத்துக்கும் தாய்மொழிவளர்ச்சிக்கும் பொதுநலத்துக்கும் உழைத்துவரும் இவ்விருபத்திரிகைகளையும் அபிமானிப்பார்களாக.

புதிய கல்வித் திட்டத்திற் கமையச் சபையார் தங்கள் பாடப் புத்தகங்களை வேண்டிய திருத்தங்களுடன் வெளியிட முயற்சி செய்து வருகின்றனர். புதிய நூல்களும் வெளிவரக்கூடிய முயற்சிகளையும் கையாண்டு வருகின்றனர்.

### புண்ணியநாச்சிமட தருமம்

சபையார் ஷெ தருமத்தைச் செவ்வனே நடத்தக்கூடிய வழிவகைகளைக் கையாண்டு வருகின்றனர். வேளாண்மை விருத்தியின்மையாலும் மழையாலும் இவ்வருடம் வருமானம் மிகக் குறைவாகும். மறவன்புலவிலுள்ள புண்ணியநாச்சிமட தருமக் காணிகளையும் பிள்ளையார் கோயிலையும் பார்வையிடவும் அங்குள்ள காணிகளின் குத்தகை நெல்லையும் பணத்தையும் அறவிடவும் திரு. மு கணபதிப்பிள்ளை உபாத்தியாயர் அவர்களையும், கொக்குவில் மேற்கு வண்ணார்பண்ணை மேற்கிலுள்ள காணிகளைப் பார்வையிடவும் குத்தகைப் பணத்தை அறவிடவும் திரு சி. ஐயம்பிள்ளை அவர்களையும் 14—7—46ல் சபையார் நியமனஞ் செய்தனர் 8—7—46ல் தோப்புச் சிதம்பரம் சித்திவிநாயகராலய மணவாளக் கோலம் நிகழ்த்தப்பெற்றது. அன்று வித்துவான் திரு. க. இராமலிங்கம் அவர்களால் இயற்றப்பெற்ற தோப்புச் சிதம்பரம் சித்திவிநாயகர் ஊஞ்சல் அரங்கேற்றப்பெற்றது. ஷெ நூலின் அச்சுப் பிரதிகள் யாவர்க்கும் வழங்கப்பெற்றன.

சண்டிருப்பாயிலும், சங்குவேலியிலும் உள்ள புண்ணியநாச்சி மட தருமக் காணிகளைத் தங்களுக்குச் சொந்தமானதாக வாதித்து வந்தவர்களுக்கு எதிராக 1941-ம் ஆண்டில் ஆரம்பித்த D. C. 16614ம் இலக்க வழக்கு சபையாருக்குச் சார்பாகப் பெரியகோட்டில் தீர்ந்தது, ஆனால் எதிரிகள் 'அப்பீல்" நீதி மன்றத்துக்கு மனுச் செய்தனர். அங்கு ஷெ வியாச்சியம் சபையாருக்குப் பிரதிகூலமாகத்தீர்ந்தது. சபையார் இக்காணிகள் சம்பந்தமாக, வழக்காடினமையால் ஒரு நன்மையுண்டாயிருக்கிறது, எதிரிகள் காணிகளைத் தொடக்கத்தில் தங்கள் சொந்தமானதென வாதித்தனர். முடிவில் அவை சிதம்பரம் அம்பலவாண சுவாமியின் தருமமென ஒப்புக்கொண்டனர். இருகோட்டுத் தீர்ப்பிலும் அவ்வாறே கண்டெழுதப்பட்டிருக்கின்றது. வியாச்சியத்தினுல் இந்த நன்மை விளைந்ததாகும்.

சிதம்பரம் மா[illegible] அநாதசாலைக் கட்[illegible] புண்ணியநாச்சிமட தருமக் கட்டடத்தையும் அவற்

## யாழ்ப்பாணம் சைவபரிபாலன சபை

### 59-வது ஆண்டு மகாசபைக் கூட்ட வரலாறு

இச்சபையின் 59வது ஆண்டு மகாசபைக் கூட்டம் அங்கத்தவர்கள் யாவரும் விபூதிப் பிரசாதம் அணிந்துகொண்டபின் தேவாரபாராயணத்துடன் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரித் தமிழ்வித்தியாசாலை மண்டபத்தில் ஷெ சபைத்தலைவர் திரு. இ. சிவகுருநாதர் அவர்கள் தலைமையில் சர்வசித்து ஆடு புரட்டாதி மீ கசுவ (5-10-47) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3½ மணிக்குத் தொடங்கி நடைபெற்றது. "காங்கேசன்துறை இராணுவ ஆசுப்பத்திரியை பழைய அரசாங்க சபை செய்துள்ள தீர்மானத்துக்கு மாறுகக் கயரோக ஆசுப்பத்திரியாகப் பாவிப்பதற்கு அரசினர் மீண்டும் முயற்சி செய்கின்றார்களென்பதையறிந்து இச்சபை பெரிதும் கவலைப்படுகின்றதெனவும் வடமாகாணத்திலுள்ள பொதுசனங்களின் அபிப்பிராயத்துக்கு மாறுக அத்தகைய நடைமுறையைக் கையாளக் கூடாதெனவும புதிய பாராளுமன்ற அங்கத்தவர்களையும அரசாங்க வைத்தியப் பகுதிபதிகாரிகளையும் இச் சபை வேண்டிக்கொள்ளுகிறது" என்ற பிரேரணையை திரு. சி. நாகையா அவர்கள் முன்மொழிய திரு. பொன்னுத்துரை அனுவதிக்க அப்பிரேரணை சர்வாங்கீகாரமாக நிறைவெய்தியது.

நிகழ்ச்சிகளில் காட்டியவண்ணம் திரு. சி. நாகையா அவர்கள் சபைக்கு அங்கத்தவர்களையும் உத்தியோகஸ்தர்களையும் தெரிவு செய்வதைப் பற்றி முன்மொழிந்த பிரேரணைகள் யோசிக்கப்பெற்றன.

சென்ற வருடாந்தக்கூட்ட வர்த்தமானம்படித்து அங்கீகரிக்கப்பட்டது. 1946 - 47 க் குரிய புண்ணியநாச்சி மடத்தினதும் சைவபரிபாலன சபையினதும் சைவப்பிரகாச யந்திரசாலையினதும் வரவு செலவுக்கணக்குகள் படித்து அங்கீகரிக்கப்பெற்றன. காரியதரிசியின் 1946—47 க்குரிய அறிக்கை அடுக்கப் படித்து அங்கீகரிக்கப்பெற்றது.

---

றிற்குரிய நிலத்தையும் தற்காலிகமாக ஆங்கு நகரசபைத் தலைவர்மூலம் ஒருவருக்குக குத்தகையாகச் சபையார் கொடுத்திருக்கின்றனர். குத்தகையால் வரும் பணம் சபையாரால் சிதம்பரத்தில் நடத்தப்படும் புண்ணியநாச்சி மட தருமக் கட்டளைக்கு உபயோகப்படுகின்றது. விரைவில் அநாதசாலைக் கட்டடத்திலும் புண்ணியநாச்சி மடத்திலும் செய்யவேண்டிய திருத்தங்களைச் செய்து அக்கட்டடங்களை அதிதிகளும், அநாதைகளும், யாத்திரை வாசிகளும் தங்கும் நிலையமாக அமைக்கச் சபையார் உத்தேசித்திருக்கின்றனர்.

### பூர்த்தியுரை

சைவபரிபாலன சபையாரால் வெளியிடப்பெறும் பத்திரிகைகளையும், புத்தகங்களையும் சைவப்பிரகாச யந்திரசாலையையும் ஆதரிக்கின்ற அபிமானிகளுக்கும் சைவபரிபாலனசபை ஆச்சிரம நிதிக்கும் சமயபரிபாலனத் தொண்டுகளுக்குப் பணவுதவி புரிகின்ற அபிமானிகளுக்கும் சபைக்கு பிற எவ்வித உதவிகளையும் புரிகின்ற பெரியார்களுக்கும் சபையின் நன்றியறிதல் உரித்தாகின்றது. சபையினதும் புண்ணியநாச்சி மடதருமத்தினதும் யந்திரசாலையினது, வரவு செலவுக் கணக்குக்களைப் பரிசோதித்து உதவுகின்ற திரு பொ. அப்புக்குட்டி அவர்களுக்கும், திரு அ துரைசிங்கம் அவர்களுக்கும் சபையின் நன்றி உரித்தாகின்றது.

மு. மயில்வாகனம்,
காரியதரிசி.

யாழ்ப்பாணம்,
5—10—47.

## சொற்பொழிவு

நிகழும் சர்வசித்து ஆடு புரட்டாதி மீ உஎ௨ (13-10-47) திங்கட்கிழமை மாலை 6½ மணிக்கு யாழ்ப்பாணம் சைவபரிபாலனசபை யாதரவில் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரித் தமிழ் வித்தியாசாலை மண்டபத்தில் விருதை முத்தமிழ்ப்புலவர் திரு. ச. கண்ணன் அடிகள் "மந்திரியாரும் மணிவாசகரும்" என்னும் பொருள்பற்றி ஓர் ஆராய்ச்சி இன்னிசைச் சொற்பொழிவு நிகழ்த்துவார்களென மேற்படி சபைக் கௌரவ காரியதரிசி தெரிவிக்கின்றார்.

### திருச்சி ரேடியோ

சனி அக்டோபர் 11

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 எம் ஏ வேணுகோபால் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 டி எஸ் உலகநாதன் வயலின் 8-30 காலை இசை இசைத்தட்டு 9 முடிவு

1 டி எஸ் உலகநாதன் வயலின் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 சர்வகலாசாலைகளுக்கு 2 தமிழில் செய்திகள் 2-05 சர்வகலாசாலைக் குறிப்பு 2-15 கோயமுத்தூர் வி ராஜலட்சுமி பாட்டு 2-15 முடிவு.

மாலை 5 கோயமுத்தூர் வி ராஜலட்சுமி பாட்டு 5-40 அற்புதத் திருவந்தாதி விளக்கம் 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6-15 கிராம நிகழ்ச்சிகள் 7 எம் ஏ வேணுகோபால் பாட்டு 7-15 பத்திரிகைப் பரிசீலனை 7-30 தமிழில் செய்திகள் 7-45 எஸ் வி பார்த்தசாரதி பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 அருணம் கற்பனை 9 30 லண்டனி லிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 வீணை கோட்டுவாத்தியம் 10 இசைவேளை இசைத்தட்டு 10-30 முடிவு.

ஞாயிறு அக்டோபர் 12

காலை 7-15 கீதாரம்பம் 7-20 தமிழில் செய்திகள் 7-30 என் ஆர் பி ஐயர் பாட்டு 8 ஆங்கிலத்தில் செய்திகள் 8-15 காலை இசை இசைத்தட்டு 8-30 ஆர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் பாட்டு 9 முடிவு

12 ஏகம்பவாணன் 12-30 அலைகடல் முகப்புச் சித்திரம் 22-35 வீட்டுக்காரர் தொல்லை 12-45 படிக்காசு இசைநிகழ்ச்சி 1 மணிமலர் 1-30 ஆங்கிலத்தில் செய்திகள் 1-40 டி வி நமசிவாயம் ஒலிப்பதிவு 2 தமிழில் செய்திகள் 2-05 பெண்ணுலகம் 2-30 நீங்கள் கேட்டவை 3 முடிவு.

மாலை 5 என் ஆர் பி ஐயர் பாட்டு 5-40 தேவாரானை 6 ஆங்கிலத்தில் செய்திகள் 6-10 அறிவிப்புகள் 6 15 கிராம நிகழ்ச்சிகள் 7 ஆர் கிருஷ்ணமூர்த்தி ஐயர் வீணை 7-30 தமிழில் செய்திகள் 7-45 புத்தகவிமர்சனம் 8 திருகோகர்ணம் என் மாணிக்கம் பாட்டு 9 ஆங்கிலத்தில் செய்திகள் 9-15 குரல்வகை இசைத்தட்டு 9-30 லண்டனிலிருந்து செய்திகள் 9-40 அறிவிப்புகள் வானிலை 9-45 கிளாரினெட் ஸாக்ஸபோன் 10 இசைவேளை இசைத்தட்டு 10 30 முடிவு.

---

### உத்தியோகத்தர் நியமனம்

A. தொகுதியினதும் C. தொகுதியினதும நிருவாகசபை அங்கத்தவர்கள இருந்தபடியிருக்க B. தொகுதிக்குரிய அடுத்த நிருவாகசபை அங்கத்தவர்கள் பின்னர் தெரிவு செய்யப்பெற்றனர்.

புதிய B தொகுதி நிருவாகசபை அங்கத்தவர்கள் திருவாளர்கள்.

1 த. முத்துச்சாமிப்பிள்ளை
2. ச. செல்வராசா
3. தி. இராசநாயகம்
4. பொ. அப்புக்குட்டி
5. சு, பொ. கந்தையா
6. சி. சபாரத்தினம்
7 திக்கம். சி. செல்லையாபிள்ளை
8 S. A. வைத்திலிங்கம்

தலைவர் உத்தியோகஸ்தர்கள்

திரு. இ. சிவகுருநாதர்

உபதலைவர்கள்

திரு த. முத்துச்சாமிப்பிள்ளை
,, சி. த மூ. ப. சிதம்பரநாதச் செட்டியார்

காரியதரிசி; திரு. மு மயில்வாகனம்

உபகாரியதரிசி

திரு. சி. பசுபதிச்செட்டியார்

தனாதிகாரி

திரு. தி. இராசநாயகம்

கணக்குப்பரிசோதகர்.

திரு. அ. துரைசிங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உலகம்பலவிதக் கதை

2-ம் பக்கத் தொடர்ச்சி

தனக்குஒருமகன் பிறந்துகல்யாணஞ் செய்து புத்திரப் பேற்றை யடைய வேண்டுமென்பதும், பேரப்பிள்ளை யென்றதனால் தனக்குச் சந்ததிவிருத்தியும் நீடித்த ஆயுளும் வேண்டுமென்பதும், மாளிகையின் மேன்மாடத்திலேயிருந்து வெள்ளிக்கிண்ணத்திலே உணவூட்ட என்பதனால், சிறந்த செல்வம் வேண்டுமென்பதும், பேரப்பிள்ளைக்கு மருகி அன்னமூட்டுவதைத் தான் பார்க்கவேண்டு மென்றதனால் பிறவிக் குருடனாகிய தனக்குக் கட்பார்வை கிடைக்க வண்டும் என்பதும் பெறப்படலாயினவல்லவா; இதை உத்தேசித்தே அப்படிச்சொன்னேன்" என்று சாமியார் சொல்ல, பாக்கியலட்சுமியும் கணவனுங் கேட்டுச் செட்டியின் நுண்ணிய விவேகத்தை மெச்சினர்.

### அண்ணு நமஸ்காரம்

உடனே விஜயரத்தினம் போய் ஒரு மோட்டர் ரதத்தை யொழுங்கு செய்து அதில் ஏறிக்கொண்டு வீட்டிற்கு மீண்டான்; அதற்கிடையிற் பாக்கியலட்சுமியும் புறப்படுதற்காகிய ஆயத்தங்களைச் செய்துகின்றாள்; "எங்களுடன் தம்பி, நீரும் வரலாகுமே" என்று சுவாமியார் விஜயரத்தினத்தைக் கேட்க, அவன், "சுவாமீ, நீங்களும் மாளுர் போய் அந்தத் தங்கைச்சியை அழைத்துவாருங்கள்; நான் அதுவரை வீட்டில் நிற்க உத்தரவு தாருங்கள்" என்று சொல்லுதலும், அப்படியே என்று சொல்லிவிட்டுச் சாமியார் பாக்கியலட்சுமியோடு இரதத்தின்மீதுஏறிக்கொண்டு தமது வாசஸ்தானத்தையடைந்தார்; சுவாமியார் இருக்குமிடத்திற்கும் விஜயரத்தினத்தின் வாசஸ்தானத்திற்குமிடையே ஒன்றரைமைல் தூரமிருக்குமென மதிக்கலாம்: சிறிய இல்லம்; ஆனாற் சுத்தமான முறையில் வைத்திருக்கக் காணப்பட்டது; பட்டினத்தின் ஒருபுறத்தே ஒரு விசாலமான தோட்டத்தின் மத்தியிலுள்ளதெனலாம்; சுவாமியார் தம்மிடத்துப் பாக்கியலட்சுமி விஜயரத்தின மென்னுமிருவர் வைத்துள்ள விசுவாசத்தையும் பயபத்தியையும் தாம் அவர்களிடத்துக் கொண்டுள்ள அன்பையும் தம்முடைய அந்த அபிமானபுத்திரிக்கு முந்தியே சொல்லியுள்ளார்; இரதம் சற்றுத் தூரத்திலே நிற்க, இருவரும் இறங்கினர் சுவாமியார் வழிகாட்டிக்கொண்டு சிறிதுதூரம் நடந்துசெல்ல, அவரைத் தொடர்ந்துகொண்டு பாக்கியலட்சுமி போனாள் சற்றுத்தூரத்தில் வரும்போதே அவர்கள் வருகையை அந்தப்பெண் தங்கள் இல்லத்தின் முன்வாசலில் நின்று கண்டாள்; சாமியார் முந்திச் சொல்லிய பெண் அந்தப் பெண்ணாகவிருக்கக்கூடுமோ என்று தன்னளவிற் சந்தேகங் கொண்டாள்; சந்தோஷப்பட்டாள்; அவ்விருவரும் சமீபத்தில் வருதலும், அவள் "ஐயா, இந்த அக்காள்தானா நீங்கள் முந்தி எனக்குச்சொன்ன அக்காள்" என்று வினவிக்கொண்டு விரைந்து வந்து பாக்கியலட்சுமியின் ஒரு கரத்தைத் தன் இருகரங்களினாலும் அன்புடன் பற்றி அழைத்துக்கொண்டுபோனாள்: "ஆம், அந்த அக்காள்தான்" என்று சாமியார் சொல்வதற்கிடையில் அச்சிறுமி பாக்கியலட்சுமியைப் பரிவுடன் ஒரு ஆசனத்தில் இருக்கச் செய்து தானும் பக்கலில் நின்றாள்; இதற்கிடையிற் சாமியார் அந்தப் பெண்ணைப் பார்த்து "மகளே, இந்த அக்காள் உன்னை அழைத்துக்கொண்டு போம்படிதான் இப்பொழுது இங்கே வந்திருப்பதால், நீ சீக்கிரம்புறப்படம்மா," என்று சொல்லுதலும், அதனைக்கேட்ட அச்சிறுமி அதிக சந்தோஷமடைந்தாளாய், "நான் புறப்பட்டு வருகிறேன், அக்கா சற்று நேரம் இப்படியிருக்கிறீர்களா" என்று கேட்க, பாக்கியலட்சுமி "ஓம்" என்றாள்; அப்பெண் அறையினுள்ளே போய்விட, பாக்கியலட்சுமி அவ்வீட்டை அவதானித்துப் பார்த்தாள்; அது அவளுக்கு ஒரு வீடுபோற் புலப்படவில்லை: ஒரு சிறிய ஆசிரமம் போலவே புலப்பட்டது; அங்கே மான்றோல், புலித்தோல், உருத்திராக்கமாலை, பூசைக்குரிய சில உபகாரணங்கள், அயலிலே பூச்செடிகள் ஆகிய இவைகளெல்லாங் காணப்பட்டன; இவைகளைப் பாக்கியலட்சுமி அவதானித்துக் கொண்டிருக்கும்போது சுவாமியார் அங்குவந்து பாக்கியலட்சுமியைப் பார்த்து, "மகளே, உம்மையும் உமது தங்கையையும் இப்பொழுது நான் உங்களுடைய வாசஸ்தானத்தில் அழைத்துக் கொண்டுபோய் விட்டு, பிறகும் நான் இங்கே வந்து பிரயாணத்திற்காகிய சில ஆயத்தங்களும் இந்த வீட்டின் பாதுகாப்பிற்காகிய சில ஒழுங்குகளுஞ் செய்யவேண்டும்" என்று சொல்ல, "அப்படியே செய்யுங்கள் சாமி" என்று பாக்கியலட்சுமிசொன்னாள்; இதற்கிடையில் அந்தச் சிறுமி புறப்பட்டு வருதலும், சாமியார் முன்செல்ல, அவர் பிறகே இரதம் நிற்குமிடத்திற்கு இருவரும் போய் அதில் ஏறிப் பின்னாசனத்திலிருந்தார்கள்; சாமியாரும் சாரதியும் முன்னாசனத்திலிருந்தார்கள்: இரதம் புறப்பட்டுச் சில நிமிஷங்களில் விஜயரத்தினத்தின் வாசஸ்தானத்தை யடைந்தது; அவர்கள் இறங்கியபின், சாரதி விஜயரத்தினத்திடம் பணம்பெற்றுக்கொண்டுஇரதத்துடன் தன்னிடத்திற்குமீண்டான்; விஜயரத்தினம்சாமியாரை உபசரித்து இருக்கச்செய்ய, பாக்கியலட்சுமியும் அந்தப்பெண்ணை அன்போடு கூட்டிக்கொண்டுபோய் உபசரித்திருத்தினாள்; பாக்கியலட்சுமியின் கணவன்தான் விஜயரத்தின மென்பதைக் குறிப்பினால் அயிர்த்த அந்தச் சிறுமி, உடனே இருக்கைவிட்டெழுந்து சமீபத்திலே போய், "அண்ணா நமஸ்காரம்" என்று சொல்லிப் பணிவுடன் நமஸ்கரிக்க, அவனும் பிரதி நமஸ்காரம் செய்து, "தங்காய், எங்கள் சாமியார் யாத்திரை முடித்து மீண்டு வரும்வரையும் நீர் இங்கே எவ்வகையான கவலையுமின்றிச் சந்தோஷமாக உங்கள் அக்காவுடன் இருந்துகொள்ளலாம்அம்மா" என்று இனியமொழி சொல்லுதலும் "எங்கள் ஐயா மீண்டு வந்தபின்னரும் நான் உங்களோடுதான் இருப்பேன்; உங்களைப்பற்றி எங்கள் ஐயா முந்தியே எல்லாம் நன்மையாகச் சொல்லியிருக்கிறார்" என்று இதமாக மொழிந்தாள்; "அப்படியே செய்யலாம்" தங்காய்" என்று விஜயரத்தினமும் அன்புடன் சொன்னான்.

### "சிந்தாயாத்திரையாகப் போய்வாருங்கள்"

சுவாமியார் போனபின்னர் பாக்கியலட்சுமி புதிதாக வந்த அந்தப் பெண்ணுக்கு ஆகாரம் உதவியபின், தன் பக்கலில் இருக்கச்செய்து,"தங்காய், உமது பெயரென்ன என்பதை நாங்கள் அறியலாமோ"என்று ஆதரவுடன் கேட்க, "அக்கா நீங்கள் அறியாமல் வேறுயார் அறிவது; என்னைத் தனபாக்கியமென்று சொல்வார்கள் எனலும், பாக்கியலட்சுமி சந்தோஷங் கொண்டாளாய், "தங்கைச்சி, உம்மோடு எங்களுள் மூன்று பாக்கியங்கள் உண்டு" என்றாள்; "அக்கா நீங்கள் சொல்வது எனக்குப் புலனாகவில்லை" என்று தனபாக்கியங் கேட்க, "தங்காய், நான் இப்படிச் சொன்னதற்கு நியாயம் என் அருமையான அக்காவின் பெயர் சிவபாக்கியம்; உம்முடைய பெயர் தனபாக்கியம்; என்னைப் பாக்கியலட்சுமியென்று சொல்லுவார்கள்; ஆதலினாலேதான் அப்படிசொன்னேன்" என்று பாக்கியலட்சுமி பதில் கூறினாள்; [illegible]

தன் பொருள்களை வைத்து எடுப்பதற்குமாகத் தங்கள் இல்லத்திலே பாக்கியலட்சுமி ஒரு அறையை ஒழுங்கு செய்தாள்; பாக்கியலட்சுமியோடு வசிப்பதனால் தனபாக்கியமும் தனபாக்கியந் தனக்குத் துணையாயிருப்பதனால் பாக்கியலட்சுமியும் பரஸ்பரம் பெரும் மகிழ்ச்சியடைவாராயினர்; இங்ஙனமாக அடுத்தநாட் காலை சுவாமியார் தம்முடைய வாசஸ்தானத்தின் பாதுகாப்பிற்காகிய ஒழுங்குகள் செய்துவிட்டு, காசியாத்திரை புறப்பட்டுக்கொண்டு விஜயரத்தினத்தின் வீட்டிற்குவந்தார். அங்கிருந்து தானே அன்று பின்னேரம் யாத்திரை புறப்படுவதென்ற நோக்கத்துடன் யாத்திரை செய்தற்காகிய பொருள் பண்டங்களையெல்லாம் பாக்கியலட்சுமியும் தனபாக்கியமும் ஆயத்தஞ் செய்தனர். யாத்திரை செய்யும் நேரம் சமீபித்தலும், விஜயரத்தினமும் புறத்தே சென்றிருந்தவன் தன் வீட்டிற்கு மீண்டான்; சுவாமியார், தமது அபிமான புத்திரியை அவதானமாகப் பேணவேண்டுமென்று சொல்லின், பாக்கியலட்சுமியும் விஜயரத்தினமும் கவலைப்படுவார்கள் என்று பயந்து, அதனைச் சொல்லாது "எங்கள் வாசஸ்தானத்திற்கு ஒரு பாதுகாப்பாளனை ஒழுங்கு செய்திருக்கிறேன்; நீங்களும் இடையிடையே அங்கேபோய் அதனைப் பார்வை செய்து வாருங்கள்" என்று சொல்லிவிட்டு, தனபாக்கியத்தைப் பரிவுடன் பார்த்து, "மகளே, இவர்களிருவரையும் உனது உற்ற சகோதரங்கள் போற் பாவித்து, அவர்கள் சொல்வதைத் தட்டாது, மனக்குறிப்பறிந்து நடந்துகொள்; உங்கள்எல்லீருடைய நன்மையையும உத்தேசித்து, நான் யாத்திரை சென்று புண்ணிய தீர்த்தங்களில் முழுகி, புராதன தலங்களைத் தரிசித்து விரைவில் மீண்டுவருகிறேன்" என்று சொல்லி அவ்விருவரிடத்தும் விடை கேட்க, அவர்கள் "சாமி, சுந்தர யாத்திரையாகப் போய்வாருங்கள்" என்று அன்புடன் சொல்லி அனுப்பினர், சாமியாரை விஜயரத்தினம் பயணத்திற் காக வேண்டிய பொருள்களுடன் ஒரு ரதத்தில் ஏற்றிப் புகைரதஸ்தானத்திலே கொண்டுபோய்ப் பயணமனுப்பி விடைபெற்று மீண்டான்; அநாதப் பெண்ணாகிய தனபாக்கியம் சாமியாரையே தனக்குத் தஞ்சமெனக் கொண்டிருந்தவள், அவருடைய பிரிவினாற் சிறிது சஞ்சலப்பட்டனளேனும், பாக்கியலட்சுமி விஜயரத்தினமென்னு மிருவரும் அவளிடத்துப் பாராட்டிய அன்பினாலும், உரிமையினாலும், மன ஆறுதலடைந்திருந்தாள்; அன்றிரவு தனபாக்கியம் படுக்கைக்குப் போகும்போது பாக்கியலட்சுமியும் அவளுடைய அறையுட்போய்த் தனபாக்கியத்திற்கு இடப்பட்ட படுக்கையில் உட்கார்ந்துகொண்டு அவளையுந் தன் பக்கத்திலே இருக்கச்செய்து, அவளுடைய முதுகைத் தடவியபடி, அவளை ஆசரங்கூர நோக்கி, "என் அருமைத் தங்காய், கேட்கிறேனென்று குறையெண்ணாதீர்; நீர் பிறந்தவூரும், நாங்கள் பிறந்தவூரும் ஒன்றென்றெண்ணுகிறேன்; எங்கள் சாமியார் உமக்கு அபிமானப் பிதாவான தெப்படி? உமது பெற்றார் இப்பொழுது எங்கேயிருக்கிறார்கள்? உமக்கு உடன்பிறந்த சகோதரர், சுற்றத்தார் உண்டா? சாமியார் முந்தியும் உமக்குத்தொடர்பானவரோ? இந்த வரலாறுகளையெல்லாம் உம்முடைய அருமையான அக்காவாகிய எனக்குச் சொல்லவொண்ணாதா" என்று கேட்டாள்; "அக்கா, உங்களுக்கு நானாகவே என் வரலாற்றைச் சொல்லி, உங்களையுந் துக்கக் கவலைக்கு ஆளாக்குவானேன் என்ற எண்ணத்தினாற் சொல்லக் கூசுகிறேன்" என்று முகவாட்டத்தோடும் [illegible] கலக்கத்தோடுங் [illegible] பாக்கியலட்சுமி "சொல்ல வேண்டாந் தங்காய்" என்று பதைபதைப்போடு அவள் கண்ணீரைத் தன் முன்றானையால் ஒற்றித் தேற்ற "அப்படியல்ல அக்கா, உங்களுக்கு என் வரலாற்றைச் சொன்னாற்றான் என்மனம் ஒருவாறு தேறுதலடையும்" என்று தன்வரலாற்றைச்சொல்லத் தொடங்கினாள். (வரும்)

## அற்புதக் காதல்

1-ம் பக்கத் தொடர்ச்சி)

'முன்னம் அவனுடைய நாமம்
கேட்டாள்
மூர்த்தி அவனிருக்கும் வண்ணம்
கேட்டாள்
பின்னை அவனுடைய ஆரூர்
கேட்டாள்
பெயர்த்தும் அவனுக்கே பிச்சி
ஆனாள்"

என்பதே அவளுடைய நிலைமை ஆயிற்று. இந்நிலையையே கபிலர் வாக்கில்

"என்தோழி மேனி
விறல் இழை நெகிழ்த்த வீவுஅருங்
கடுநோய்
அகலுள் ஆங்கண் அறியுநர் வினவும்
பாவியும் தொழுதும் விரவுமலர் தூயும்
வேறுபல உருவின் கடவுள் பேணி
நறையும் விரையும் ஓச்சியும் அலவுற்று
எய்யா மையலை நீயும் வருந்துதி"

என்று தலைவியின் தீராநோயின் நிலையைக் குறித்து செவிலித்தாய் நற்றாய்க்கு கூறினதைக் காண்க.

மேலே கூறியபடி மணிமந்திரங்களாலும் கடவுள் பூசையாலும் தெளியாத தலைவி அன்னை அத்தன் முதலியோர் வந்தாலும் அவர்களை அறியாது கிடந்தாள், வற்புறுத்தினால் அவனே எனக்கு அன்னையும் அத்தனும் என்பாள். 'மானிடர்க்கு வாழ்பட்டேன் அல்லேன்' என்ற ஆண்டாள் மொழியை கொள்ளத் தொடங்கினாள். பண்டைக்காலம் முதல் தொன்றுதொட்டு தன் குலத்தார் பொன்னே போலப் போற்றிவந்த ஆசாரங்களை விட்டாள். மானம்துறந்தவள்போல் தெருவில்செல்லத் தொடங்கினாள், வரவாத் தன் பெயரையும் மறந்தாள். எப்போதும் தலைவனுடைய தாளையே நினைந்து நினைந்து உருகி உருகி அழுது அழுது புரளுவாள்; இவ்வுத்தமி எப்போது தலைவனை அடைவாள். அடைந்து விட்டாள் என்றே உலகம் கூறுமல்லவா. அந்தநிலையைக்கண்ட முற்றத்துறந்த முனிவராகிய அப்பர் சுவாமிகள்,

"அன்னையையும் அத்தனையும் அன்றே
நீத்தாள்
அகன்றாள் அகலிடத்தார் ஆசாரத்தைத்
தன்னை மறந்தாள் தன்நாமம்
கெட்டாள்
தலைப்பட்டாள் நங்கை தலைவன்
தாளே."

என்று வெகு உருக்கமாக வருணிக்கிறார்.

தலைவி-உயிர்; தலைவன் இறைவன்; திரு உலாவில் தரிசித்தது அவன் சன்னிதானத்தை; அப்போது பக்குவம் அடைந்திருந்தது உயிர். அவன் கடைக்கண் நோக்கம்பட்டது. உலக வாசனை போயிற்று. அவன் அடியை அடைந்தது உயிர். அதற்குத் தன் இச்சை ஒழிந்தது, அவன் இச்சையே ஆயிற்று. இதுவே அப்பர் கவியின் உட்கருத்து. —சித்தாந்தம்.

## சாவகச்சேரியில் டிஸ்திறிக் நீதித்தலம்

சாவகச்சேரியில் ஓர் டிஸ்திறிக் நீதிஸதலத்தை அமைக்க அரசாங்கம் முடிவுசெய்துளது. வருகிற 20-10-47-இல், சாவகச்சேரி நீதிஸ்தலத்தில் டிஸ்திறிக் நீதிஸ்தல விசாரணை ஆரம்பமாகும். பருத்தித்துறை டிஸ்திறிக் நீதிபதி மிஸ்ரர் தல்கோடப்பிற்றிடா அவர்களே சாவகச்சேரி டிஸ்திறிக் நீதிபதியுமாயிருப்பர். ஒருவாரத்தில் திங்கள் செவ்வாய்க் கிழமைகளில் மாத்திரமே டிஸ்திறிக் நீதிஸ்தல விசாரணை சாவகச்சேரியில் நிகழும்;

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலேயாவுக்கு நாகபட்டணம் மார்க்கமாக

## கப்பல் சீட்டு

[ மாசமிருமுறை கப்பல்கள் போகின்றன ]

யாழ்ப்பாணமிருந்து றேயில்வே ரிக்கற், சாப்பாடு, லக்கேஷ்சார்ஷ் இருப்பிடச்செலவு எல்லாம் உட்பட நாகபட்டனமிருந்து பினுங் செல்ல டெக் ரிக்கற் ருபாய் 130 க்கு எங்கள் மூலமாக பெற்றுக் கொள்ளலாம்

**வேறு செலவு உங்களுக்கு இல்லை**

பல நூற்றுக்கணக்கானோர் எங்கள் மூலமாகப் பிரயாணஞ்செய்து திருப்தியடைந்து கொடுத்த நற்சாட்சிகள் அநேகம் உண்டு.

**வடஇலங்கையில் இவ்வகையில் முதல்ஸ்தானம் வகிக்கிறோம்**


எங்களிடம் மற்ற விபரங்களை நேரிலோ லெட்டர் மூலமோ தெரிந்துகொள்ளலாம்.

ஸ்ரீ கதிர்வேல் அன்கோ,
252, சாங்கேசன்துறைரேட்,
சிவன்கோவிலடி,
யாழ்ப்பாணம்.

தந்தி (Srivel)
பிராஞ்சு: நாகபட்டணம்.

Std 83 2—9—47&28.2 48

## உங்கள் சங்கீதக் கருவிகள் பழுதடைந்துவிட்டனவா?



அப்படியானல் உடனே எம்மிடம் கொண்டுவாருங்கள்
3 வருட உத்தரவாதத்துடன் புத்தம்புதிதாய் பழுதுபார்த்துத் தருகிறோம்
[ எவ்வித நிலைமையில் உள்ளதாயினும் சரி கட்டணம் வெகு சகாயம் ]
கஸ்தூரிமோகன்புளுட் ஹார்மோனியக் கம்பெனி,
சிவலிங்கப்புளியடி, 484, K K. S. றேட், யாழ்ப்பாணம்.

Std 34 12—9—47 To 9—12—47. (F)


விளம்பரமின்றேல் பெரும்பணியில்லை


## பசந்த லேகியம்

இதனுல் மூலச்சூடு, இருமல் பித்தப் பாண்டு, குன்மவாய்வு, நெஞ்செரிவு, கைகால் வலி, அசதி, அஜீரணம், வயிற்றுப் பொருமல், புளித்த ஏப்பம், மலச் சிக்கல், பீனிசம், பார்வைக் குறைவு, வெள்ளை, சூலை, சந்து வாய்வு, பிரமேகம் முதலிய வியாதிகள் சூரியனைக் கண்ட பனிபோல் நீங்கும். இந்திரியம் கட்டுப்பட்டு, தேக புஷ்டி, வஜீகரம், பலம் முதலானவை உண்டாகும்.

ஸ்திரீகளுக்குண்டாகும் பிரதானமான வியாதியாகிய சூதகக்கட்டு, பிரசவத்தால் உண்டாகும் பல கொடிய உபத்திரவங்கள் தீர்ந்து மாதவிடாய் குறைந்து அல்லது அதிகமாய்க்காணுதலால்நேரிடும் பல நோய்களும் தீர்ந்து, தேகத்துக்குப்பலம் உண்டாக்கும்.

ஒருறுத்தல் விலை ரூபா 25
அரைறுத்தலுக்கு ரூபா 12-50
கால்றுத்தல் ரூபா 6-25

விலாசம்:

**க. ஆறுமுகம்பிள்ளை**

நி. 156, செக்கடித்தெரு கொழும்பு

Std. 1, 26—3—47 to , 1—4—48

## தந்தரோக சஞ்சீவி

கந்தசாமி வைத்தியர்

**சந்தனாதித் தயிலம்**

ஒரு கிழமைக்கு வைக்கக்கூடிய
ஒரு அவுன்சு தயிலம் விலை ரூ 2

ஒவ்வொருநாளும் ஒருசதவீதம் வைத்துக் கடைசியன்று சீயாக்காய் வெந்தயம் அவித்துத் தப்பி வெந்நீரில் தோய்வது. பத்தியம்: புகையிலையாகாது. ஆடினபல்லு உடனே இறுகும், முரசுவளரும், வாய்ப் புண் வீக்கம் தொண்டைப்புண் சம்மல் இருமல் கபாலம் பீனிசம் மாற்றும் உத்தரவாதமுடையது. ஒரு தடவை வேண்டிப்பாவித்து அறியலாம்.

நெருப்புச்சூடு முதல் எந்த வேக்காட்டிற்கும் பூச உடனே வேதனை தணியும்.

வீ. பீ. பீ. யிலும் அனுப்புவோம்.

சீசா முதலிய செலவு வேறு

விலாசம்:

ஆயுள்வேத சிவசோதி
மெடிக்கல் ஹோல்
வல்வெட்டித்துறை

Std 25 1-7-46—30-6-48 (வே)

## கொழும்பு—சிங்கப்பூர் கப்பல் பிரயாணம்

மாதம் ஒருமுறை ஒழுங்காகச் செல்லும் கப்பலில் பிரயாணச்சீட்டு எம்மூலம் பெற்றுக்கொள்ளலாம். பிரத்தியேக வண்டியில் யாழ்ப்பாணமிருந்து பிரயாணம், கொழும்பில் தங்கும் வசதி யாவும் குறைந்த செலவில் ஏற்பாடு செய்யப்படும்.

நாகபட்டணம் பினுங் பிரயாணிகளின் கட்டணம் 130 ரூபாவாகக் குறைக்கப்பட்டிருக்கிறது.

விபரம்:
எஸ். ஆர். எஸ். நாதன்,
21/3, ஸ்ரான்லி றேட் யாழ்ப்பாணம்
[வின்சர்-வெலிங்டன் படமாளிகைகளின் மத்தியில்]

Std 23. 6-6-47—6-6-48

## விளம்பரம்

இப்பொழுது எங்கள் கைவசமுள்ள பற்கள் பிரபையுடையன; அழகிய இயற்கையானநிறமுடைய முரசு பொன்ற முரசோடு கூடியன; சராசரி ½ அவுன்ஸ் நிறையுள்ள பற்கள் இறகுபோலப் பாரமற்றன; ஆனல் ஒருபோதும் உடையாதன; முரசில் இலகுவாக மாட்டத்தக்கன: எங்களிடத்தில் ஒருமுறை வாங்கி உபயோகித்தாற்றான் இந்த உண்மைகள் உங்களுக்குப் புலப்படும்.

**பத்திரானு மாளிகை**
[யாழ்ப்பாணம் அப்போதிக்கரிஸ கம்பனிக்கு எதிரேயுள்ளது]
யாழ்ப்பாணம்

Std 28 11-7—10-10-47.

# இலங்கை வங்கி

(1938-ம் ஆண்டு 53-ம் இலக்கக் கட்டளைச் சட்டத்தின்படி சட்டபூர்வமாக இணைக்கப்பட்டது)

### இலங்கை அரசாங்கத்தின் வங்கிக்காரர்

| | | |
|---|---|---|
| வாக்களிக்கப்பட்ட மூலதனம் | ருபா | 4, 500, 000, 00 |
| கொடுக்கப்பட்ட வேதனம் | ,, | 3, 000, 000, 00 |
| சேமநிதி | ,, | 2, 600, 000, 00 |

தலைமைக்காரியாலயம்:- பிரிஸ்ரல்வீதி, கொழும்பு.
நியுயோர்க் ஏஜெண்டுகள்:- ஏர்விங் ட்ரஸற் கம்பனி.
லண்டன் ஏஜெண்டுகள்:- பார்க்கிளேஸ வங்கி.
கிளைக்காரியாலயங்கள்:- புறக்கோட்டை, (கொழும்பு) கண்டி, காலி. திருக்கோணமலை, பாணந்துறை, குருநாகலை (பழைய நகரமண்டபம்)
யாழ்ப்பாணத்துக் காரியாலயம்:- 242,ஆஸ்பத்திரிறேட், யாழ்ப்பாணம்.

வாடிக்கைகாரர்களுக்குப் பல விசேஷ வசதிகள் இவ்வங்கி செய்துகொடுக்கின்றது.

**நடைமுறைக்கணக்கு:-**
இலங்கையில் (திருக்கோணமலையை ஒழிந்த) உள்ள எல்லாப் பிரதான நகரங்களிலும் மாற்றக்கூடிய "செக்"குகள் கொமிஷன் இன்றிப் பெற்றுக்கொள்ளப்படும்.

**சேமிப்புப் பணம்:-**
ஆகக்கூடிய தொகை ருபா 10, 000. வட்டி நூற்றுக்கு வருடம் ஒன்றுக்கு 2 விகிதம் கேட்டநேரம் திருப்பிக் கொடுக்கப்படும்.

**நிரந்தர சேமிப்பு:-**
இதற்கான விகிதம் முதலியவற்றைக் கேட்டு அறிந்து கொள்ளலாம்.

**கடன்களும் மேலதிகமாகக் கடன் பெறுதலும்:-**
அங்கீகரிக்கப்பட்ட பிணையின் பேரிற் கொடுக்கப்படும்.

**நாணயமாற்று:-**
இதற்கான ஏஜெண்டுகள் உலகெங்கும் உண்டு.

**பிறநாட்டு விவகாரப் பகுதி:-**
ஜீ. ஓ. எச். கட்டிடம், யோர்க் வீதி, கொழும்பு.

இந்தியா, மலாய்நாடுகளுக்கு அனுப்பக்கூடிய உண்டியல், தந்தி, மாற்றுப் பத்திரங்கள் விஷயமாக விசேஷ வசதிகள் செய்து கொடுக்கப்படும்

**T. S. முத்துலிங்கசாமி**
ஏஜெண்டு,

Std.29 1-8—30-7-48


வான்முகில் வழாதுபெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசுசெய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்களோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by PANDIT V. T. SAMBANDHAN, residing at Vannarponnai West, Jaffna, for and on behalf of the Proprietors, the Saiva Paripalana Sabha, Jaffna, at their Press, the Saiva Prakasa Press Vannarponnai Jaffna. on Friday, October 10, 1947.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org